Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 28 (19.04.2004) திங்கட்கிழமை இதழ் :201

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

(சி/2228)

# பிரதி பாதுகாப்பு அமைச்சராக மீண்டும் அநுருத்த ரத்வத்தை?

## ஜனாதிபதி சந்திரிகா திட்டமிருவதாகத் தகவல்

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் அனுருத்த ரத்வத்தையை நியமிக்கத்திட்டமிட்டிருப்பதாகவும் - அதற்கான ஏற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருப்பதாகவும் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. தேசியப்பட்டியலிலும் இவரது பெயர் இடம்பெற்றிருக்கவில்லை.

ஆயினும், தனது மாமனாரான ஜெனரல் அனுருத்த ரத்வத்தையையும், முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவையும் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுத்தார்.

ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு சபாநாயகர் பதவி வழங்குவதற்கும், ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு முக்கிய அமைச்சுப் பதவியொன்றையும் வழங்க ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

உடதலவின்ன கொலை வழக்கில் முக்கிய சந்தேக நபரான ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு முக்கிய அமைச்சுப் பதவி வழங்குவது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும், கட்சிக்கு வெளியி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உதவிவழங்கும் நாடுகளின் விசேட கூட்டம் அடுத்த மாதம்

## பெல்ஜியத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் விசேட கூட்டம் அடுத்த மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு, உதவிகள் வழங்கும் வகையில் நடத்தப்படவுள்ள இந்தக் கூட்டம் பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிரஷெல்சில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொனறு அடுத்தமாதம் கொழும்புக்கு வரவுள்ளது.

இந்தக் குழுவினர் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கான பின்னணித் தரவுகளை சேகரிக்க விருப்பதாகவும் இதற்கான ஏற்பாடுகளை அமெரிக்க இராஜாங்க பிரதிச்செயலாளர் றிச்சர்ட் ஆர்மிரேஜ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதியின் நினைவு தினம் தமிழீழமெங்கும் இன்று அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னைபூபதியின் 16 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று தமிழீழ தாயகம் எங்கும் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1988 ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கு - கிழக்குக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த- இந்திய இராணுவத்தினரின் கொடுமைகளுக்கு எதிராக குரல்கொடுத்து, தமிழர் தாயகத்திலிருந்து அவர்களை வெளியேறுமாறு கோரி உண்ணாநோன்பிருந்து, அன்னை பூபதி உயிர் நீத்தார்.

கடந்தமாதம் 19 ஆம் திகதி முதல் அன்னை பூபதியின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இன்று அவர் உயிர் நீத்த நாள் என்பதால், தமிழர் தாயகமெங்கும் விஷேட நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று யாழ்.மாவட்டத்தின் பலபகுதிகளிலும் காலை 9 மணிமுதல் 3 மணிவரை அடையாள உண்ணாவிரதமும், நினைவுநாளும் இடம்பெறவுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஆயுதக் கப்பல் வருகிறதாம்; கிழக்குக் கடலில் பாதுகாப்பு அதிகரிப்பு!

## 'லங்காதீப' பத்திரிகை கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான ஆயுதக் கப்பல் ஒன்று முல்லைத்தீவுக் கரையை நோக்கி வந்துகொண்டிருப்பதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுதது கிழக்குக் கடற்பரப்பில் கடற்படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருப்பதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

சிரேஷ்ட கடற்படை அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட இந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான கப்பல் ஒன்று ஆயுதங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களுடன் இலங்கையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

தாய்லாந்திலுள்ள பெயர் குறிப்பிடப்படாத துறைமுகம் ஒன்றிலிருந்து கடந்த 8 அல்லது 9 ஆம் திகதி இந்தக் கப்பல் புறப்பட்டதாக கடற்படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்தக் கப்பலில் 120 மி.மீற்றர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களை துரோகத்தனத்திலிருந்து மீட்டதற்காக புலிகளுக்கு மக்கள் நன்றி தெரிவிப்பு!

# மட்டுவிலில் லொறி மோதி சைக்கிளில் சென்றவர் பலி

றும் வாகன உதிரிப்பாகங்களுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# துரோகத்தனத்திலிருந்து மீட்டதற்காக புலிகளுக்கு மக்கள் நன்றி தெரிவிப்பு!

துரோகத்தனத்திலிருந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் மட்கப்பட்டதற்கு, தமிழீழத் தேசியத் தலைவருக்கும் தளபதிகள், போராளிகளுக்கும் மக்கள் தமது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

கருணாவின் தேசத்துரோகத்தால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களுக்குக்கும் போராளிகளுக்கும் ஏற்பட்ட அவலங்கள், இழப்புக்கள், தேசவிடுதலைப் போராட்டத்திற்கு ஏற்படுத்தவிருந்த நெருக்கடி என்பவற்றை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், தமிழீழத் தேசியத் தலைவரால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மூலம் இழப்புக்கள் எதுவுமின்றி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள், போராளிகள் மீட்கப்பட்டனர். இதன்போது சில சகாக்களுடன் துரோகி கருணா தப்பியோடிவிட்டார்.

தமிழீழத் தேசியத் தலைவரின் திட்டமிடல் மூலம் இழப்புக்களின்றி துரோகத்தில் இருந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் மீட்கப்பட்டு விட்டது.

அங்கிருந்த ஆயுதங்கள் யாவும் எதுவித சேதமின்றி மீட்கப்பட்டுள்ளன. வாகனங்கள் பல கருணா குழுவால் எரிக்கப்பட்டன.

கருணாவால் கைவிடப்பட்ட போராளிகள் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

துரோகத்தனத்தில் இருந்து அம்பாறை, மட்டக்களப்பை மீட்கும் நடவடிக்கையில் மட்டக்களப்பு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், தளபதி ராம், துணைத் தளபதி பிரபா ஆகியோருடன், ஜெயந்தன் படையணி, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, மாலதி படையணி, லெப். கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி ஆகியவை இணைந்து செயற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு எம்.பி. இராஜநாயகம் பதவி விலகுவதாக அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான கிங்ஸ்லி இராஜநாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசாவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தனது சுயவிருப்பத்தின் பேரிலேயே தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**க.பொ.த உயர்தரப் பரீட்சைகக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி - கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்களும், பாடக்குறிப்புக்களும் நாளை முதல் 'நமது ஈழநாட்டில்' தினமும் வெளிவரும்.**

**உங்கள் பிரதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.**

# மட்டுவிலில் லொறி மோதி சைக்கிளில் சென்றவர் பலி!

(மட்டுவில்)

தென்மராட்சி - மட்டுவில் பகுதியில் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் மீது லொறி ஒன்று மோதியதில் அவர் உயிரிழந்தார்.

இநதச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் வதிரி - கரவெட்டியைச் சேர்ந்த 45 வயதான வல்லிபுரம் யோகேஸ்வரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நேற்றுக் காலை மட்டுவில் பகுதியில் வீதியோரமாக மேற்படி நபர் சென்று கொண்டிருந்தவேளை - எதிரே வந்த லொறி அவர் மீது மோதியதில் அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான லொறி, மணல் ஏற்றிவந்ததாகத் தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறையில் கடந்த ஆண்டு இடம்பெற்ற

# படுகொலை சந்தேகநபர் யாழ்.நகரில் கைதானார்!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் யாழ். நகரில் வைத்துக் கைதுசெய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த வருடம் மே மாதம் 2 ஆம் திகதி ஊர்காவற்றுறைப் பகுதியில் வைத்து தி.ஜெகத்ஜெனனி என்ற 24 வயதுடைய சமுர்த்தி உத்தியோகத்தர் படுகொலை செய்யப்பட்டார்.

கொலை இடம்பெற்று சுமார் ஒரு வருடமாகியும் - இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

your friend in the skies...

கருணாவை அகற்றியதன்மூலம்

# உளவியல் யுத்தத்திலும் தமது பலத்தை புலிகள் உலகிற்குக் காட்டியுள்ளனர்!

## வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்

தமிழீழ விடுதலைப் புலிகள் போரியல் ரீதியில் வெற்றிகளைப் பெற்று இராணுவ பலத்தை வெளியுலகுக்கு காட்டினர். தற்போதைய சமாதான காலத்தில் அரசியற் பலத்தையும் காட்டியுள்ளனர். அத்துடன், புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவை கிழக்கு மாகாணத்திலிருந்து அகற்றியதன் மூலம், போரியலில் மற்றொரு வடிவமான உளவியல் யுத்தத்திலும் தமது பலத்தை வெளியுலகுக்குக் காட்டியுள்ளனர்.

இவ்வாறு - வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார். உலகில் வாழும் அனைத்துத் தமிழர்களும் இந்த விடயத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தனர்.

எனினும் விடுதலைப் புலிகள் பாரிய இழப்புகள் எதுவுமின்றி கருணாவைக் கிழக்கிலிருந்து அகற்றினர். இது விடுதலைப் புலிகளின் உளவியல் ரீதியான போர் வெற்றியாகும் என்று தெரிவிதார்.

தியாகி அன்னை பூபதியின் தியாகத்திற்கு அன்று கருணா முழுமையான ஆதரவு வழங்கினார். எனினும், இம்முறை நிகழ்வு ஆரம்பமான போது அந்த தியாகியை அவமதித்தார். அந்த தியாகியின் நினைவு நாள் முடிவடைவதற்கு முன்னதாகவே கருணா அந்த மண்ணிலிருந்து அகற்றப்பட்டுவிட்டார்.

இதுதான் அந்த தியாகிக்கும், தியாகத்திற்கும் கிடைத்த உச்சமான மரியாதை என்று வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மேலும் தெரிவித்தார்.

# பணியாளர் நலன்புரித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும், இதனுள் உள்ளடங்கும் ஆறு சங்கங்களிலும் கடமையாற்றும் பணியாளர்களுக்கான பணியாளர் நலன்புரித் திட்டம் இந்த மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி பணியாளர் ஒருவர் விபத்து மரணமானால் 20 ஆயிரம் ரூபாவும், இயற்கை மரணமானால் 10 ஆயிரம் ரூபாவும், அங்க இழப்பானால் 10 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரையும், உடல பூரணமாகப் பாதிப்படைந்தால 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த நலன்புரித் திட்டத்தில் 18 வயது முதல் 60 வயது வரையான பணியாளர்களே ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும், பணியாளர் ஒருவர் தொடர்ந்து மூன்று வருடங்கள் பணிபுரிந்து தொடர்ந்தும் கடமையிலிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திலும் அதன் கீழுள்ள சங்கங்களின் பணியாளர்களுக்கும் இந்த மாதத்திலிருந்து வழங்கப்படவுள்ள நலன்புரித் திட்டத்தின் மூலம் பணியாளர்கள் பெருமளவில் நன்மையடைவர் என - வலிகாமம் பனை தென்னை - வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார். (91)

# அலங்கார வளைவு நெடுந்தீவில் அமைப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவிலித்துறைமுகப் பகுதியில் அலங்கார வரவேற்பு வளைவொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

நெடுந்தீவு பிரதேச சபையினரால் இந்த வேலை மேற்கொள்ளப்படுகின்றது. 'நெடுந்தீவு வரவேற்கின்றது' என்று குறிப்பிடப்படும் வகையிலான அலங்கார வளைவே அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று துறைமுகப் பகுதியில் மரங்கள் நாட்டி வளர்க்கப்படுமாயின் துறைமுக நுழைவாயில் வனப்புறக் காட்சிதரும் என பலரும் குறிப்பிட்டுள்ளனர். (113)

# புலிகளுக்குள் பிளவை ஏற்படுத்த முயன்றவர்கள் திரிசங்கு நிலையில் சிக்கிப் போயுள்ளனர்!

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் மத்தியில் பிளவினை ஏற்படுத்தி பிரதேசவாதத்தைத் தூண்டிவிட முயற்சித்தவர்கள் தற்போது திரிசங்கு நிலையில் இருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

புத்தளத்தில் நடைபெற்ற வடமேல் மாகாணத் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது -

அறுதிப் பெரும்பான்மையற்ற நிலையில் அரசாங்கம் ஆட்சியமைக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது.

சிறுபான்மையினரை ஒதுக்கி அரசியலமைப்பை மாற்றுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கதொன்று. இத்தகையதொரு அரசுக்கு எந்தக் காரணம் கொண்டும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை.

தாம் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அவதானிக்கப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வாஜ்பாயை எதிர்த்து

# போட்டியிலிருந்து விலகவில்லை; ராம்ஜெத்மலானி அறிவிப்பு!

பிரதமர் வாஜ்பாயை எதிர்த்துப் போட்டியிடுவதில் இருந்து தான் விலகவில்லை என திடீரென்று ராம்ஜெத்மலானி அறிவித்திருக்கிறார்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோ நாடாளுமன்றத் தொகுதியில் பிரதமர் வாஜ்பாய் போட்டியிடுகின்றார். அவரை எதிர்த்து பிரபல சட்டத்தரணி ராம்ஜெத்மலானி வேட்புமனு தாக்கல் செய்தார். அவருக்கு ஆதரவு அளிப்பதாக காங்கிரஸ் கட்சியும் அறிவித்திருந்தது.

ராம்ஜெத்மலானியும் பிரதமர் வாஜ்பாயும் நெருங்கிய நண்பர்கள். நாம் இருவரும் மோதிக்கொள்ள வேண்டாம் என்று அவருக்கு பிரதமர் உருக்கமான வேண்டுகோளை விடுத்திருந்தார். இந்த நிலையில் லண்டனில் உடல்நலக்குறைவாய் இருக்கும் தன்னுடைய மகனைப் பார்க்க ராம் ஜெத்மலானி லண்டன் புறப்பட்டுச் சென்றார். அதைத் தொடர்ந்து குடும்ப சூழ்நிலையால் போட்டியிலிருந்து விலகுவதாக அவர் சார்பில் அறிவிக்கப்பட்டது!

இதற்கிடையில் - லண்டனில் இருக்கும் ராம்ஜெத்மலானி நேற்று முன்தினம் திடீரென்று ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

'நான் லக்னோ நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடுகின்றேன். எனது போட்டியை வாபஸ் பெற்றதாகக் கூற யாருக்கும் அதிகாரமில்லை' என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

லக்னோ தேர்தல் அதிகாரிகளுக்கு தனது கைப்பட எழுதிய கடிதம் ஒன்றையும் தொலைநகல் மூலம் ராம்ஜெத்மலானி அனுப்பியிருக்கிறார். அதேபோல், அவருடைய நண்பர் அக்னிவேஷ் என்பவருக்கும் செய்தி அனுப்பியிருக்கிறார்.

அரசியலில் சில நேரங்களில் நட்பை அல்லது கண்ணியத்தை தேர்ந்தெடுக்க வேண்டி வரும். இன்றைய நிலையில் நட்பை புறக்கணிக்கும்படி எனது மனச்சாட்சி சொல்கிறது என்றும் அதில் ராம்ஜெத்மலானி குறிப்பிட்டிருக்கிறார்.

அவரது இந்த அறிவிப்பு அரசியல் வட்டாரத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஏற்கனவே காங்கிரஸ் சார்பில் அகிலேஷ்தாஸ் களத்தில் நிற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைப் பெற்று மாகாண போட்டிக்குத் தெரிவாகியுள்ள உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் 15 வயது பிரிவினரைக் காணலாம்.

# மெத்தனப் போக்கில் தொடரும் குமுதினிப் படகு திருத்த வேலை

குறிகாட்டுவான் - நெடுந்தீவு இடையில் ஈடுபடுத்தப்படும் குமுதினிப் படகு, திருத்த வேலைகள் மாசி மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டபோதும், இதுவரை ஒரு பகுதி வேலை கூட பூரணமாக முடிக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

படகினுள் நீர் உட்புகாதவாறு போடப்படும் கலப்பத்து வேலை, உடைந்த பலகை மாற்றம், அடிப்பகுதிக்கான தகடு பொருத்துதல் மற்றும் இயந்திர கூடார திருத்தம் போன்ற அநேக வேலைகள் உள்ள போதும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இவ்வேலையில் மெத்தனப் போக்கினைக் காட்டிவருகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இனிவரும் காலங்களில் கடும் காற்றும், கடற் கொந்தளிப்பும் உள்ள காலமாகையால் - திறந்த படகுகளில் பயணிப்பதில் பெரும் அசௌகரியங்களை நெடுந்தீவு மக்கள் எதிர்கொள்ள நேரிடும். இதனைக் கருத்திக்கொண்டாவது குமுதினிப் படகுச் சேவையை ஆரம்பிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் ஆதங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

### நிர்வாகசபைக் கூட்டம்

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாகசபைக் கூட்டம் நாளை மறுதினம் சங்கப் பணிமனையில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

வேலைவாய்ப்புத் தொடர்பாக கலந்துரையாட வேண்டியுள்ளதனால், சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்க செயலாளர் கேட்டுள்ளார்.

### கணினிகள் அன்பளிப்பு

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்திற்கு 2 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பாடசாலை அதிபர் க.நடராசாவிடம் இரு கணினிகளையும் கடந்தவாரம் கையளித்ததாக மகாவித்தியாலய அதிபர் தெரிவித்தார். (91)


நமது ஈழநாடு பத்திரிகை அனுசரணையுடன்
யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் நடாத்தும்
யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான
மாபெரும் அஞ்சலோட்டப் போட்டி - 2004

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 30 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான அஞ்சலோட்டப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

பிரிவுகள் :- 17 வயதிற்குட்பட்டோர் ஆண், பெண் 4 X 200
20 வயதிற்குட்பட்டோர் ஆண், பெண் 4 X 200

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தமது அணி வீரர்களின் விபரங்களை எதிர்வரும் 20.04.2004 சனிக்கிழமைக்கு முன்னதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

போட்டி ஒழுங்கமைப்பாளர்,
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்.



நாகம்ஸ் சுன்னாகம்
புதிய வெளியீடாக
பிரசன்னா, அனு, நிரோஸ், வடிவேல்
மற்றும் பலர் நடித்த
காதல் டாட் காம்
(ரீல்ஸ்)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

நிறஞ்சனாஸ் சங்கானை
கமல் (இருவேடம்) மனிஷா
நடித்த
இந்தியன்
(சி-2386)
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
Maid in ManHatton

ராஜா யாழ்ப்பாணம்.
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

## வடமேல் மாகாணசபைத் தேர்தல்;

# இடதுகையின் மூன்றாவது விரலில் அடையாள மைபூசத் தீர்மானம்!

(கொழும்பு)

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு, இடதுகையின் மூன்றாவது விரலில் அடையாள மையைப் பூசுவதற்குத் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலின்போது பூசப்பட்ட மை இன்னமும் விரல்களில் அழியாது தென்படுவதால் - இந்தமுடிவை தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ளார். இது தொடர்பான தகவலை வடமேல் மாகாண தேர்தல் வேட்பாளர்கள், வாக்காளர்கள் மற்றும் தேர்தல் உத்தியோகத்தர்கள் ஆகியோர் அறிந்திருக்கவேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை பொலிஸார் மாகாண சபைத் தேர்தலுக்கான அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளனர்.


வடமேல் மாகாணசபைக்கு 12 அரசியல் கட்சிகளிலிருந்தும் 7 சுயேட்சைக் குழுக்களிலிருந்தும் 52 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு நிலைமைகள் குறித்து கடற்படை தளபதி - பிரதமர் பேச்சு

நாட்டின் பாதுகாப்பு குறித்து கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் - நாட்டின் பாதுகாப்பு மற்றும் கடற்படையை நவீன வசதிகள் கொண்ட படையாக மாற்றியமைத்தல், அதில் காணப்படும் குறைபாடுகளுக்குத் தீர்வுகாணுதல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.



பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு நினைவுச்சின்னத்தைப் பரிசளிக்கிறார் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி.

# கிழக்கு மக்களின் நிலைகுறித்து இன்று ஜனாதிபதி மாளிகையில் மாநாடு

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் கடமையாற்றும் அரசாங்க அதிபர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா மாநாடொன்றை நடத்தவுள்ளார்.

ஜனாதிப்தி மாளிகையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் - யுனிசெவ், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள், புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன் இந்த மாநாட்டின் போது கிழக்குப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பொது இணக்கப்பாட்டை எட்டுவதற்காக மூன்று கட்சிகள் பேச்சுவார்த்தை!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒரு பொது இணக்கப்பாட்டை அடையும் வகையிலான பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும் - இதில் ஜாதிக ஹெல உறுமய சார்பில் கட்சியின் பிரசாரச் செயலர் உடுவே தம்மலோக தேரரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அதன தலைவர் ஆறுமுகன் தொண்டமானும் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொது இணக்கப்பாட்டை எட்டுவதே இந்தப் பேச்சுவார்த்தையின் முக்கிய நோக்கமாக இருந்தபோதும், சரியான இணக்கப்பாடுகள் எட்டப்படாத நிலையிலேயே இந்தப் பேச்சுவார்த்தைகள் நிறைவுற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இம்மூன்று கட்சிகளில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்தபடியே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நிபந்தனைகளுடனான ஆதரவினை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளன.

இந்தநிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக இனனமும் எதுவித முடிவுகளையும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சபாநாயகர் தெரிவுக்கு

## வாக்காளர் அட்டைகள் பயன்படுத்தத் திட்டம்!

புதிய நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் தேர்தலில் வாக்காளர் அட்டைகள் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில் புதிய சபாநாயகர் தெரிவிற்கான போட்டிகள் இரு பிரதான கட்சிகள் இடையேயும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளதன் காரணமாகவே இந்த நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்றப் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி கூடவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் சபாநாயகரை நியமிப்பது தொடர்பில் இரு பிரதான கட்சிகளிடையேயும் போட்டிகள் அதிகரித்துள்ளது.

அத்துடன் இ தற்கான ஆதரவை ஏனைய கட்சிகளிடம் திரட்டும் படலங்களும் தற்போது இரு பிரதான கட்சிகளிடையே சூடுபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏவுகணைகளைச் செயலிழக்க வைக்கும் அமெரிக்கக் கப்பல் இலங்கை வரவுள்ளது

(கொழும்பு)

ஏவுகணைகளைச் செயலிழக்கச் செய்யும் சிறப்பு அமெரிக்க கடற்படை போர்க் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

டி.டி.ஜி 985 என்ற பெயரையுடைய இந்தப் போர்க்கப்பல் நட்புறவு விஜயமாகவே இலங்கை வரவுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

இலங்கை வரவுள்ள இந்த அமெரிக்கக் கப்பல் ஒருவாரகாலம் இலங்கையின் கடற்பரப்பில் தரித்து நிற்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான தரங்கினி எனப்படும் பாய்மரக் கப்பலொன்று கொழும்புத்துறைமுகத்தில் தற்போது தரித்துநிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பதினெட்டு தமிழ் அகதிகள் மன்னாருக்கு திரும்பினர்

தமிழ்நாட்டிலுள்ள திருநெல்வேலி அகதிமுகாம் மற்றும் கரூர் ராஜவூர் அகதி முகாம்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் 18 பேர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை தலைமன்னாரை வந்தடைந்தனர்.

சிறிய படகுகள் மூலம் வந்த இவர்கள், தலை மன்னார் பகுதியிலுள்ள கடற்படையினரிடம் சரணடைந்தனர். இவர்களை கடற்படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றில் விசேடமாக ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வவுனியா - மகாறம்பைக்குளம் மற்றும் பூந்தோட்டம், மன்னார் வங்காலை மற்றும் பேசாலைப் பகுதிகளை சொந்த முகவரியாக கொண்ட இவர்கள் நேற்றுமுன்தினமே அவர்களது இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவ்வாறு வ்ந்த 18 பேரில் 11 ஆண்கள், 4 பெண்கள், 3 சிறுவர்கள் அடங்கியிருந்தனர்.

இதேவேளை, இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளில் வந்த 22 இலங்கைத் தமிழ் அகதிகளை தலைமன்னார் உறுமலைக் கடற்பரப்பல் வைத்து தலைமன்னார் கடற்படையினர் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

(201)

### ஓட்டமாவடியில் கிரனைட் வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் உள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீது கடந்த வியாழக்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபர்களால் கிரனைட் ஒன்று வீசப்பட்டது.

அப்துல் ரஹ்மான் என்ற முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளரின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது வீடு சேதமுற்றபோதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

வாழைச்சேனைப் பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

# ஏறாவூர் காட்டிலிருந்து 5 வாகனங்கள் மீட்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை, செங்கலடிக் காட்டுப் பிரதேசங்களிலிருந்து கைவிடப்பட்ட நிலையில் ஐந்து வாகனங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

போலி வாகனத் தகடுகளுடன் காணப்பட்ட இந்த ஐந்து வாகனங்களும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களுக்குரிய உரிமையாளர்களைத் தேடும் பணிகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாக ஏறாவூர்பொலிஸ்நிலைப் பொறுப்பதிகாரி எச்.எம்.அமீர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இவை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் கடத்திச்செல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் ஊகம் தெரிவிக்கின்றனர்.

# வடக்கு - கிழக்கில் 50 கோடி செலவில் 10 குளங்கள் புனரமைக்கப்படும்!

## பீஸ் நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் உள்ள ஏழு மாவட்டங்களிலும் 50 கோடி ரூபா செலவில் பத்து பாரிய குளங்களை புனரமைக்கத் திட்டமிடப்பட்டள்ளது.

ஜப்பானிய வங்கியின் உதவியுடன் 'பீஸ்' நிறுவனம் திட்டமிட்டுள்ள இந்தப் பாரிய வேலைத்திட்டத்தில் 11 ஆயிரத்து 491 குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

வடகது - கிழக்கு மாகாண சபையின்கீழ் அமுல்படுத்தப்படவிருக்கும் இந்தத் திட்டத்தை நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சு தயாரிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.


கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 1583 ஏக்கர் காணிகளுக்கு நீர் வழங்கும் அக்கராயன்குளம் 10 கோடி 30 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதன் காரணத்தால் 1319 குடும்பங்கள் நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தெண்ணியான்குளம் 344 ஏக்கருக்கு நீர்வழங்கக்கூடியது. இந்தக்குளம் 2 கோடி 60 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதனால் 350 குடும்பங்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோல வவுனியா மாவட்டத்திலுள்ள மூன்று குளங்கள் இனங்காணப்பட்டுள்ளன. செம்மடுக்குளம், மல்லிகைக்குளம், மாமடுவக்குளம் ஆகியவற்றிலிருந்து 631 ஏக்கருக்கு நீர் வழங்கப்படுகின்றது. இது 4 கோடி 80 லட்சம் ரூபா செலவில் மீளப்புனரமைக்கப்படவுள்ளது. இதன்மூலம் 680 குடும்பங்கள் நன்மையடையும்.

மன்னாரில் தட்சணாமருதமடுக்குளம் 215 ஏக்கர் நிலத்திற்கு நீர் வழங்குகின்றது. இது 1 கோடி 60 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதன் காரணத்தால் 215 குடும்பங்கள் நன்மையடையும் என தெரிவிக்கப்படுகின்றது.




வடமராட்சி லயன்ஸ் கழகம் நெல்லியடியில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் ஆய்வுகூட தொழில்நுட்ப உதவியாளர் என்.அகிலன் நோயாளி ஒருவருக்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்வதனையும்-வடமராட்சி லயன்ஸ் கழக தலைவர் என்.கதிரமலை மற்றும் செயலாளர் சட்டத்தரணி எஸ்.தங்கராஜா, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (17)

## 194 ஓட்டங்களுடன் இருந்தபோது

# ஆட்டத்தை முடித்துக்கொண்டதனால் ட்ராவிட்டுடன் கருத்து வேறுபாடு இல்லை

## சச்சின் டெண்டுல்கர் பேட்டி



194 ஓட்டங்களில் இருந்தபோது டிக்ளேர் செய்ததால் எனக்கும், டிராவிட்டுக்கும் இடையே எந்தவித கருத்து வேறுபாடுகளும் இல்லை என்று டெண்டுல்கர் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராக முல்தானில் நடந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்டின் முதல் இனிங்சில் இந்திய அணி 675 ஓட்டங்கள் எடுத்து இருந்த நிலையில் கப்டன் டிராவிட் அத்துடன் முதல் இனிங்ஸ் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தார். அப்போது நட்சத்திர வீரர் டெண்டுல்கர் 194 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் ஆடிக்கொண்டிருந்தார்.

டெண்டுல்கர் இரட்டைச் சதம் அடிக்க மேலும் 6 ஓட்டங்களே தேவைப்பட்ட நிலையில் ட்ராவிட் டிக்ளேர் செய்ததால் பல்வேறு தரப்பிலும் இருந்து விமர்சனம் எழுந்தது. டெண்டுல்கரும் இதற்கு அப்போது அதிர்ச்சி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இது குறித்து டெண்டுல்கர் தற்போது பேட்டி அளித்துள்ளார். அப்போது அவர் கூறியதாவது -

முதலாவது டெஸ்டின் முதல் இனிங்சை முடித்துவிட்டு வெளியே வந்தபோது, பத்திரிகையாளர்கள் ட்ராவிட்டின் டிக்ளேர் முடிவு குறித்து கேட்டனர். அப்போது நான் டிக்ளேர் முடிவினால் அதிர்ச்சி அடைந்ததாகக் கூறினேன்.

டிக்ளேர் செய்தபோது, 194 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் ஆடிக்கொண்டிருந்ததால், நான் எப்படியாவது இரட்டைச் சதம் அடித்திருப்பேன். எனவேதான் நான் எனது அதிருப்தியைத் தெரிவித்தேன். இதனால் நான் அணியின் நலன்மீது அக்கறை இல்லாதவன் என்று கூறமுடியாது.

தனிப்பட்ட வீரரின் நலன் முக்கியம் அல்ல. மாறாக அணியின் நலன்தான் முக்கியம் என்று நினைப்பவன் நான். என்னைப் பொறுத்தவரையில் டிக்ளேர் முடிவு உணர்பூர்வமான விஷயமேதவிர, இது பெரிய விஷயம் அல்ல.

ட்ராவிட்டையும், என்னையும் வெளிப்படையாக பல்வேறு தரப்பினரும் விமர்சனம் செய்ததால, அப்போது அசாதாரண நிலை இருந்தது. இதனால். எங்களுக்கு இடையே இறுக்கமான சூழ்நிலை உருவாகி இருந்தது.

ஆனால், இந்தப் பிரச்சினையை நாங்கள் இருவரும் வெளிப்படையாக நேரில் பேசித் தீர்த்துக்கொண்டோம். இதனால் எங்களுக்கிடையே தற்போது எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் கிடையாது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டித்தொடரின் முடிவு நமக்கு சாதகமாக அமைந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. பாகிஸ்தான் பயணத்திற்கு முன்பு இந்திய அணிமீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன.

ஆனால், தொடர்களின் வெற்றிமூலம் நாங்கள் அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டோம் என டெண்டுல்கர் கூறினார்.

## இன்று நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இன்று நடைபெறும் மாவட்ட மட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் விபரம் வருமாறு -

16, 18 வயதுப் பிரிவு - காலை 8.30 மணிக்கு வேலணை துரைச்சாமி மகா வித்தியாலயம் எதிர் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம்.

காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் எதிர் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம்.

18, 16 வயதுப் பிரிவு மாலை 2.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி எதிர் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி.

யாழ்.புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம் எதிர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

அணிகளை உரிய நேரத்திற்கு விளையாட்டரங்கிற்கு சமூகமளிக்குமாறு நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (58)

விளையாட்டு

## பாடசாலை மட்ட கிரிக்கெட்

# யாழ்.மாவட்ட சம்பியனாக கொக்குவில் இந்து அணி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் வலய ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட முதல் இரண்டு அணிகளிடையே நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி அணியை வெற்றிகொண்டு இவ்வருட யாழ். மாவட்ட மென்பந்துக் கிரிக்கெட் சம்பியனாக கொக்குவில் இந்துக் கல்லூரி அணி தெரிவுசெய்யப்பட்டது.

கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 20 ஓவர்கள் கொண்ட இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 18 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணித தலைவர் கிருபானந்தன் 32 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். மகாஜனாக்கல்லூரி அணியின் சார்பில் சனா 4 விக்கெட்டுக்களையும் தனஞ்செயன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி அணி 16.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றமையால் 11 ஓட்டங்களால் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி அப்போட்டியில் வெற்றிபெற்றது. கொக்குவில் அணியின் சார்பில் திலீபன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமை குற்றிப்பிடத்தக்கது.

மாவட்ட ரீதியான இறுதிப் போட்டியில் பங்குபற்றிய மேற்படி பாடசாலைகளான கொக்குவில் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் இவ்வருடம் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்றும் தகுதியினைப் பெற்றுள்ளன. (58)

# விளையாட்டுப் போட்டியில் தொண்டமனாறு ஒ.வி.க. சம்பியன்

(பருததுததுறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு நடத்திய 2004 ஆம் ஆண்டுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப்பெற்று சம்பியன் அணியாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இந்தக் கழகத்தின் சார்பில் பிரதேச செயலகமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களின் விபரம் வருமாறு.

**சுவட்டு நிகழ்ச்சி**

100 மீ.ஓட்டம் - 1ஆம் இடம் - எஸ்.சிவசுதன், 2 ஆம் இடம் - ரி.ராஜ்குமார், 200 மீ.ஓட்டம் - 1 ஆம் இடம் - பி.தினேஸ்குமார், 2 ஆம் இடம் - எஸ்.சிவசுதன், 400 மீ.ஓட்டம் - 1 ஆம் இடம் - பி.தினேஸ்குமார், 2 ஆம் இடம் - வி.ராஜ்குமார், 800 மீ.ஓட்டம் - 1 ஆம் இடம் - எம்.யோகேந்திரதாஸ் - 2 ஆம் இடம் - வி.லஜந்தன், 1500 மீ.ஓட்டம் - 1 ஆம் இடம் - வி.லஜந்தன், 5000 மீ.ஓட்டம் - 1 ஆம் இடம் - கே.இராமலிங்கம், 10000 மீ.ஓட்டம் - 3 ஆம் இடம் - கே.இராமலிங்கம்

**களநிகழ்ச்சி**

நீளம் பாய்தல் - 2 ஆம் இடம் - எம்.செல்வராஜ, ஈட்டியெறிதல - 3 ஆம் இடம் - எம்.செல்வராஜ்

மேலும் 4x100, 4x400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகளிலும் தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகமே முதல் இடத்தைப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# உயிர் இருக்கும்வரை குரல் கொடுப்பேன்

### பிரசாரக் கூட்டத்தில் வைகோ பேச்சு

(திருவண்ணாமலை)

என்னை சிறையில் அடைத்து 19 மாதம் கழித்து பொடா மறு ஆய்வுக்குழு அமைக்கப்பட்டது. நான் பேசியது தவறா, நியாயமா என்று நீதிமன்று சொல்லட்டும். தவறு என்றால் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயார் என ம.தி.மு.க. செயலாளர் தெரிவித்தார்.

ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் வந்தவாசி தொகுதியில் போட்டியிடும் ம.தி.மு.க. வேட்பாளர் செஞ்சி ராமச்சந்திரனை ஆதரித்து வந்தவாசியில் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு பேசினார். அவர் அங்கு மேலும் பேசியதாவது -

ஈழத்தமிழர்கள் பற்றி பத்திரிகைகளிலும், தொலைக் காட்சியிலும் காட்டப்படுகிறது. எனவே நான் பேசியதில் தவறு இல்லை என்று நீதிமன்றில் வாதாடினேன். அதை நீதிமன்று ஏற்றுக்கொண்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் வைகோ என்ன பேசினார் என்று ஜெயலலிதா கேட்கிறார். நாடாளுமன்ற சுவரை தட்டிப்பாருங்கள். நாட்டின் திட்டங்கள் குறித்தும், நதிகள் இணைப்புக் குறித்தும், இளைஞர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் குறித்தும் பேசினேன் என்று கூறும்.

அரசியலில் கருநாகம் நுழைந்துவிட்டது. அதை அகற்றும்வரை ஓயமாட்டேன் என வைகோ பேசினார்.

## சௌந்தர்யா சென்ற

# விமானம் விபத்துக்குள்ளான சம்பவம்; விசாரணை தொடந்து நடைபெறுகிறது

(பெங்களூர்)

பெங்களூரில் நேற்றுமுன்தினம் நடந்த விமான விபத்தில் பலியான நடிகை சௌந்தர்யா மற்றும் அவர் அண்ணன் உடல்கள் ஹரீஷ் சந்திரா நகர சுடுகாட்டில் தகனம் செய்யப்பட்டன. 4 பேர் உயிரைப் பறித்த இந்த குட்டி விமானம் எதனால் தீ பிடித்தது என்று ஏலகன்சா பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றார்.

சௌந்தர்யா உயிரைப் பறித்த விமானம் என்ன காரணத்தினால் விபத்துக்குள்ளானது என்பது பற்றி இதுவரை எந்த சிறு தடயமும் கிடைக்கவில்லை. இதனால், விபத்துக்கான காரணம என்ன என்பது புரியாத புதிராகவுள்ளது.

மின்கோளாறு ஏற்பட்டு தீ பிடித்து இருக்கலாம். பெரிய பறவை ஏதேனும் மோதி விமான எஞ்சின் பழுதாகி வீழ்ந்திருக்கலாம், விமானியின் தவறான இயக்கம் காரணமாக தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருக்கலாம். இப்படி பல காரணங்கள் கூறப்படுகிறது. ஆனால், உறுதியாக இதுதான் விபத்துக்கான காரணம் என்று எந்தத் துப்பும் துலக்கவில்லை.

விபத்துக்கான காரணத்தை கண்டறிய முதல்கட்ட விசாரணையை மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் தொடங்கியுள்ளனர். விபத்துக்குள்ளான விமானத்தில் கறுப்புப்பெட்டி எதுவும் கிடையாது. எனவே குட்டிவிமானம் பழுதாகும் முன்பு உண்மையில் என்ன நடந்தது என்பதைத் துல்லியமாக கண்டுபிடிக்க முடியாது.

எனவே, விமானத்தில் தீ பிடித்ததை நேரில் பார்த்த பொதுமக்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதையடுத்து, உடைந்து சிதறிய விமானத்தின் பாகங்கள் சேகரிக்கப்பட்டு சோதனை நடக்கிறது.

குட்டி விமானத்தின் கதவு 150 மீற்றர் தூரத்தில் கிடந்தது. அதுபோல உடைந்த இறக்கை ஒன்றும், விசிறியும் சகதிகளுக்குள் கிடந்தன. சிதறிய விமானப் பாகங்களைச் சேகரித்த அதிகாரிகள் குழுவொன்று விசாரணை நடத்தி வருகிறது. இவ்வாறு அக்னி ஏவியேசன் நிறுவன அதிகாரி அரவிந்த்சர்மா கூறினார்.



டெல்கியில் இருந்துவந்துள்ள அதிகாரிகள் நேற்று 2 ஆவது நாளாக விசாரணை நடத்தினார்கள். குட்டிவிமானம் விழுந்து வெடித்த - விவசாய பல்கலைக்கழக பணியாளர்கள் மற்றும் தீயணைப்புத்துறையினரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள்.

அக்னி ஏவியேசன் நிறுவன அதிகாரிகளிடமும் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து விசாரணை நடக்கும் என்று டெல்கி அதிகாரிகள் கூறியுள்ளனர். எனவே விசாரணை முடிவுகள் வெளியாக இன்னும் சில தினங்கள் ஆகலாம்.

சௌந்தர்யாவைக் கொன்ற விமானம் செஸ்னா - 180 என்ற ரகத்தைச் சேர்ந்தது. 1955 ஆம் ஆண்டு வெளிநாட்டில் தயாரான இந்த குட்டி விமானம் 50 ஆண்டு பழமையானது. இந்த விமானத்துக்கான ஆயுட்காலம் 25 ஆண்டுகள்தான். அதாவது 1980 ஆம் ஆண்டு வரைதான் அதை நன்கு பயன்படுத்த முடியும் என்று அந்த விமான தயாரிப்பு நிறுவனம் கூறியிருந்தது. ஆனாலும், அதைப் பழுதுபார்த்து இயக்கி வந்தனர்.

# நாய் இறந்த சோகத்தில் தற்கொலை செய்த பெண்!

செல்லமாக வளர்த்து வந்த நாய் இறந்ததால் மனம்உடைந்த பெண்ஒருவர் தற்கொலை செய்துகொணடார்.

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவல்லிபுத்தூரைச் சேர்ந்த முருகலட்சுமி இவருக்கு கல்யாணமாகி 12 ஆண்டுகளாகியும் குழந்தை இல்லை. இதனால் ஒரு நாய்க்குட்டியை வாங்கி முருகலட்சுமி - பிள்ளை போல வளர்ந்துவந்தார்.

இந்நிலையில் முருகலட்சுமி வளர்த்து வந்த நாய்க்குட்டி கடந்த மாதம் இறந்துவிட்டது. இதனால் முருகலட்சுமி மனம் உடைந்தார். சோகமாக இருந்து வந்தார். கடந்தவெள்ளிக்கிழமை அவரது சோகம்முற்றியது. இதனால், வீட்டில் யாரும் இல்லாத சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு மண்ணெண்ணை ஊற்றித் தீவைத்துக்கொண்டார்.

கருகிய நிலையில் உயிருக்குப் போராடிய அவரை அக்கம் பக்கத்தினர் ஸ்ரீவல்லிபுத்தூர் அரச மருத்துவமனைக்கும் பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரச மருத்துவமனைக்கும் கொண்டு சென்றனர். ஆனால் சிகிச்சை பலனளிக்களாமல் பரிதாபமாக இறந்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### வைத்திய சிகிச்சை

அமெரிக்க இராணுவ வைத்திய குழு எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ். போதனா வைத்திசாலையில் பதிவுசெய்யப்பட்ட நோயாளர்களை சிகிச்சைக்காக தெரிவு செய்யவுள்ளனர்.

எனவே, பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மற்றும் சத்திரசிகிச்சைக்காக ஏற்கனவே பதிவு செய்தவர்களும், பதிவு செய்யாமல் சிகிச்சைபெற விரும்பும் ஏனைய நோயாளர்களும் - எதிர்வரும் 24 ஆம் திகதி வைத்தியசாலைக்குச் சமுகமளிக்கும்படி வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கிராமிய வங்கிகளுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

கிராமிய வங்கிகளுக்கான உபகரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ் - மட்டக்களப்பு மாவட்டங்களில் இயங்கும் கிராமிய வங்கிகளுக்கு தலா 22 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நிக்கொட் நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட கிராமிய வங்கிகளுக்கான 22 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்று இன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிக்கொட்டினால் வழங்கப்படவுள்ள கிராமிய வங்கிக்கான உபகரண விநியோகம் தொடர்பான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என நிக்கொட் நிறுவனத்தின் பணிப்பாளர் இலங்காநேசன் தெரிவித்தார். (04)

# சமூகவிடுதலைக்காக ஒவ்வொருவரும் உழைக்கவேண்டியது கடமை!

## மாவை சேனாதிராசா உரை



'ஒவ்வொருவரும் தத்தம் சமூக விடுதலைக்காக உழைப்பது அவர்களின் கடமை. இருந்தும் ஒரு இனத்தின் விடிவுக்காக ஒரே மனத்தினராய் குரல் கொடுக்கவேண்டிய பொறுப்பும் அவர்களுக்குண்டென்பதை மறக்கக்கூடாது' இவ்வாறு கரவெட்டி கிழக்கில் நடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசனுக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் -

எமது மக்களுக்கு சம அந்தஸ்து வேண்டுமென்று 1958 ஆம் ஆணடிலிருந்து ஏகோபித்த குரலெழுப்பியது முதல், எமது சமூகத்துக்குள்ளே உரிமை மறுக்கப்பட்ட ஒரு இனமாகப் புறந்தள்ளப்பட்ட வேதனைக்குரிய செயலைத் தமிழரசுக் கட்சியும் தமிழர் கூட்டணியினரும் கண்டிக்கத் தவறவில்லை. தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளும் நாடாளுமன்ற வாசத்தால் தீர்ந்துவிடவில்லை. சாத்வீகமுறைப் போராட்டங்களும், சமரசப் பேச்சுவார்த்தைகளும் 20 வருட வரலாற்றில் இழுத்தடிப்புச் செய்யப்பட்டதுதான் மிச்சம்.

1977 ஆம் ஆண்டின் பிற்பட்ட காலத்தில்தான் தமிழ் ஈழத்திற்கான அத்திவாரம் புலிகளால் இடப்பட்டது. மாபெரும் மக்கள் சக்தியாகப் புலிகள் இயக்கம் வளர்ச்சி கண்டது. ஆட்பலம் மற்றும் ஆயுதபலம் கொண்டவர்களாகவும் புலிகள் விளங்கினர்.

எதிரிகளை நேருக்கு நேர் சந்தித்து தமது பலத்தை வெளிப்படுத்தினர். தென்னிலங்கை அரசாங்கம் நிலை குலைந்தது. புலிகள் தமது தாயகக் கோட்பாட்டை நிலை நிறுத்த பல மாவீரர்களை இழந்தனர். அவர்களின் தியாகத்தால் எழுப்பப்பட்டதே தமிழர் தாயகம். தன்னாட்சி, சுந்திரம் என்பதாகும்.

இவர்களின் வீரத்தியாகமே தென்னிலங்கை அரசு - தலைவர் பிரபாகரனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், போர்நிறுத்தம் என 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 இல் கைச்சாத்திடவைத்தது.

எமது தாயகத்தில் எம்மால் நிர்வகிக்கப்படும் ஒரு இடைக்காலசபை உருவாகக்கூடிய வாய்ப்பு அண்மித்துக் கொண்டிருந்தது. அந்தவேளை பார்த்து சந்திரிகா தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தையே கலைத்து, புதிய தேர்தலுக்குத் திகதியும் குறித்துவிட்டார்.

விடுதலைப் புலிகளே தமிழரின் ஏகப்பிரதிநிதிகள். புலிகளுடன் மட்டுமே பேச்சு என்பதை மறைத்து, விடுதலைப் புலிகளுடனும் பேச்சு என்றதோர் புதிய தாரக மந்திரத்தை ஓதி, மக்களை மாயைக்குள் சிக்க வைக்கப் பார்த்தார்.

தெளிவற்ற அவரின் அரசியல் கொள்கைக்கு சிங்கள மக்கள் தெளிவற்ற தேர்தல் முடிவுகளைத் தெரிவித்து, தெளிவின்றி இருக்கும் நிலைக்குள் தள்ளிவிட்டனர்.

ஆனால், தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கூடாகத் தமது முடிவை தெளிவாகத் தெரிவித்துவிட்டனர். உலக நாடுகளைக்கூட தெளிவுறச் செய்துவிட்டனர். 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒரே அணியின்கீழ் உருவாக்கிச் சரித்திரம் படைத்து விட்டனர்.

சந்திரிகாவுக்கு 45 இலட்சம் வாக்குகளும் ரணிலுக்கு 35 இலட்சம் வாக்குகளும் கிடைத்தபோதும் ஆட்சியமைக்கத் திணறுகின்றனர். ஆடசி அமைக்க உதவுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமல்ல. நாடாளுமன்ற ஆசனங்கள் எமக்கு முக்கியமானவையல்ல. எமது எண்ணங்கள், அபிலாசைகள், கோரிக்கைகள் நிறைவு செய்யப்படவேண்டும். அதுவே மக்களின் ஆணை.

அடுத்த இரண்டு வருடங்களின்பின் தற்போதைய ஜனாதிபதி மீண்டும் ஜனாதிபதியாக வரமுடியாது. அந்தக் கவலை அவருக்கு. தான் ஏன் அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடாது இந்தக் கவலை ரணிலுக்கு. இப்படித் தென்னிலங்கையில் அரசியல் குழம்பிப்போய் இருக்கிறது. ஆனால், எம்மில் குழப்பமில்லை, கொள்கை மாற்றமல்லை. தெளிவானநிலையில் வலுவாகவிருக்கின்றோம்.

எமது நிலைப்பாட்டைச் சர்வதேசத்திற்கு தெளிவாககிவிட்டோம். சர்வதேச நெருக்குதல்கள் அரசிற்கு வர ஆரம்பித்துவிட்டன. இடைக்காலசபை அமைப்பதை யாரும் இனித்தடுக்கமுடியாது. அந்த இடைக்கால சபையூடாக எமது அபிலாசைகள் பெரும்பாலும் தீர்க்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (13)

## சின்னஞ்சிறு செய்திகள்

### நுணாவில் கொல்லங்கராய்வீதி திறந்துவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நுணாவில் கொல்லங்கராய் வீதி நேற்றுமுன்தினம் பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

பலவருடங்களாக இப்பாதையூடாக பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு படைத்தரப்பு அனுமதி மறுத்திருந்தது. இதனால், இது வரை காலமும் கைதடி, நாவற்குழி வடக்குப் பகுதி, மறவன்புலவு போன்ற பகுதிகளுக்குச் செல்வதற்கு தச்சன் தோப்பு ஊடாகவே பொது மக்கள் போக்குவரத்துச் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (29)

### நீண்டகாலமாக திருத்தப்படாத நிலையில் பண்ணைச் சந்திவீதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைச் சந்தி தொடக்கம் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் வரையான பிரதானவீதி நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமையால் பயணிகளும், வாகன உரிமையாளர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

திருத்தம் செய்யவென கற்கள் பறிக்கப்பட்டுள்ளபோது சுமார் 200 மீற்றர் நீளமான வீதியில் புனரமைப்பை இழுத்தடிப்பதனால், பெரும் விபத்துக்களையும் எதிர்கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு வருகின்றமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

மேலும், இவ்வீதியில் பெரும் குண்டும் குழியும் இருப்பதனால் வாகனங்களும், அதில் பயணிக்கும் பயணிகளும் பெரும் உபாதைகளுக்கு உள்ளாவதும் குறிப்பிடத்தக்கது. (113)

# மாவீரரின் நினைவுக்கல் கோப்பாயில் திரைநீக்கம்

கரப்புக்குத்தி - விஞ்ஞானகுளம் பகுதியில் கடந்த 5.10.97 ஆம் ஆண்டு இராணுவத்துடனான மோதலின்போது, வீரச்சாவடைந்த மாவீரர் ஒருவரின் நினைவுக்கல் நேற்றுமுன்தினம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

பலாலி தெற்கு வசாவிளானைச் சொந்த முகவரியாகவும், கோப்பாய் தெற்கு இருபாலையை தற்காலிக முகவரியாக்வும் கொண்ட லெப். சிவப்பிரியன் (ஜோன் கெற்பிக்சன் - யஸ்ரின் ஜெயமதி) என்ற மாவீரரின் நினைவுக் கல்லே திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.


முன்னதாக இம் மாவீரரின் திருவுருவப் படம் மாலை 4.30 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல மண்டபத்தில் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

கோப்பய் மாவீரர் துயிலுமில்லத்தைச் சேர்ந்த த.கண்ணன் தலைமையில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்வில் ஈகச்சுடரினை மாவீரரின் தாயாரும், கோப்பாய் பிரதேச பங்குத்தந்தையும் ஏற்றிவைத்தனர்.

மாவீரரின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை மாவீரரின் சகோதரரும் போராளியுமான வெற்றி நிலவன் அணிவித்தார்.

இதன்பின்னர் - வீரவணக்க உரையினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆற்றினார். திருவுருவப் படத்திற்கான மலரஞ்சலியை அடுத்து மாலை 5.45 மணியளவில் நினைவுக் கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில், பெருமளவ்ான பொதுமக்களும் போராளிகளும் கலந்துகொண்டனர்.



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவையினால் வெளியிடப்படும் ஞானசுடர் சஞ்சிகைக்கு தொடர்ந்து ஆக்கங்களை எழுதிவரும் எழுத்தாளரை கௌரவிக்கும் விழாவில் - ஓய்வுபெற்ற அதிபரும், எழுத் தாளருமான கே.நடராஜாவுக்கு பிரபல சட்டத்தரணி உருத்திரா பொன்னாடை போர்த்தி பரிசு வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (17)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 12 ஆம் ஆண்டுவிழா நிகழ்வுகள் - விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் எதிர்வரும் 21, 22, 23 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மயில்வாகன சிவசூரியா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் இந்நிகழ்வில், பொது விரிவுரைகள், முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆய்வரங்குகள், 'இலங்கையில் 2 ஆம், 3 ஆம் நிலைக் கல்வி எதிர்நோக்கும் சவால்கள்' என்னும் தலைப்பில் பல்துறை அறிஞர்கள் பங்குகொள்ளும் கருத்தரங்கு என்பன இடம்பெறவுள்ளன.

இறுதிநாள் நிகழ்வாக கைலாசபதி கலையரங்கில் 2004, 2005 ஆம் ஆண்டுக்கு விஞ்ஞான சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விவசாயப் பீடாதிபதி எஸ்.இராசதுரை - 'யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளமும் விவசாயமும்' எனும் பொருளில் ஆற்றும் தலைமையுரையும் இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டுவிழா நிகழ்விலே இடம்பெறும் ஆய்வரங்கிற்கு யாழ். விஞ்ஞானசங்க அங்கத்தவர்களும், ஏணைய அமர்வுகளுக்கு ஆர்வமுள்ள அனைவரையும் வருகைதந்து, கலந்து பயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். யாழ். பிரதேசத்தில் உயர்தர வகுப்புகளில் கல்விகற்கும் மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதன்மூலம் மிக்கபயன்பெறமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# நெடுந்தீவு சந்தைப் பகுதியில் பொலிஸார் திடீர் சோதனை

நெடுந்தீவு மத்திய சந்தைப் பகுதியிலுள்ள சில வர்த்தக நிலையங்களில், சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யப்படுகின்றதாகக் கிடைத்த தகவலையடுத்து, கடந்த வாரம் சாதாரண உடையில் சென்ற பொலிஸார் அப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சாதாரண உடையில் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவதனை வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியபோது, அவர்கள் மிரட்டப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து அந்த வர்த்தகர்களின் வீடுகளும் சோதனையிடப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறான நடவடிக்கையினால் வர்த்தகர்கள் பெரும் குழப்பமடைந்ததுடன், பெரும் சிரமங்களுக்கும் ஆளானதாகவும் தொிவிக்கப்படுகிறது. (113)


**இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

**பத்தாவது அகவையில்**



பெயர் : தி.நிஷாந்தன்

முகவரி : நெல்லியடி கிழக்கு, முடக்காடு.




உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்க வளவில் அநாதையாக விடப்பட்ட நாய்க் குட்டிகளுக்கு பூனையொன்று பால் ஊட்டிய அதிசய நிகழ்வு ஒன்றினை படத்தில் காணலாம். (116)







# உயிர் தவித்தல்



## டானியல் ஜீவா

என் அண்ணன் மகள் நீலாவுக்கு என் மீது விருப்பம் என்று சொல்வதிலும் பார்க்க என் சயிக்கிளில் ஏறித் திரிவதிலே விருப்பம் என்று சொல்லலாம். அவ்வப்போது அவள் செய்யிற குழப்படியால் என்னிடம் அடியும் வாங்குவாள். அடி வாங்கினாலும் சுனக்கெட்டவள்போல் என்னையே சுற்றித் திரிவாள். எப்படியும் காலையில் அவள் படிக்கும் பாடசாலைக்கு நான் எட்டு மணிக்கு முதல் ஏற்றிக்கொண்டு எட்டரைக்கு பள்ளிக்கூட வாசலில் விடவேண்டும். மீண்டும் பதினொரு மணிக்கு அவளைக் கூப்பிடுவதற்காக போகவேண்டும். சையிக்கிளில் நடுவாரில் இருந்து என்னொட வரும்போதே ஏதேனும் என்னுடன் கதைத்துக்கொண்டே வருவாள். நீலா எப்போதாவது என்னிடம் கேள்வியெழுப்புவாள். சில கேள்விகளைக் கேட்டபின் அவளின் புத்திக் கூர்மையைக் கண்டு வியந்து போய்விடுவேன்.

வீட்டில் இரவில் தூங்கும்போதும் நான்தான் பக்கத்தில் தூங்கவேண்டும். அவள் எனக்குப் பக்கத்தில் தூங்கும்போது சித்தப்பா ஒரு கதை சொல்லுங்க என்று கேட்பாள். நான் கதைக்குப் பதிலாக அவளுடைய குறும்புச் செயலை வேறொரு பாத்திரமாகச் சித்தரித்து கதையை விடுவேன். நான் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவள் கதையின் போக்கை கவனித்துக்கொண்டிருந்துவிட்டு, இடையிலே சொல்லுவாள் - 'இந்தக் கதை என்னைப் பற்றித்தான்' என்று சொல்லிவிடுவாள்.

"என்னெண்டு உன்ர கதையெண்டு நீ கண்டுபிடிச்சனி" என்று நீலாவிடம் கேட்டாள், அவள் சொல்லுவாள் 'சித்தப்பா நீங்கள் கதையைச் சொல்லேக்கேயே ஒரு ஊரில ஒரு ராசாவுக்கும் ராணிக்கும் இரண்டு குழந்தைகளாம். ஒரு ஆணும் மற்றது பெண்ணுமாம். ராசாவினுடைய மகள் எந்த நேரமும் சித்தப்பாவோடுதான் சைக்கிளில்ல திரிவாவாம். எந்த நேரமும் அவங்கட அண்ணாவோட சண்டைபிடிப்பாவாம் என்று நீங்கள் செர்ல்லேக்கேயே எனக்கு விளங்கிடும் என்று நீலா சொல்லுவாள்.

அவள் காலையில் எழுந்து விட்டாள் என்றால், பாடசாலைக்கு போறதுக்கு தூயவெள்ளைச்சட்டையை போட்டுக் கொண்டே வீட்டில் நடமாடுவாள். எனக்கு எப்போதும் காலை வெயில் உடம்பில் படும்வரை தூங்குவதென்றால் பிடிச்ச விசயம். அம்மா விடியக்காலையில் தூங்குவதைக் கண்டால் 'மோன எழும்படா' என்று சொல்லுவா. நான் உடுத்திக்கொண்டு படுத்திருக்கும் சாரத்தால் மேலும் தலைமுட்ட இழுத்து போத்திக் கொண்டு திரும்பிப் படுத்திடுவேன். நீலா என்னை எழுப்ப வந்தாள் என்றால், அவளுடைய அரியண்டம் தாங்க முடியாமல் எழும்பிவிடுவேன். எப்பவும் எனக்குப் பக்கத்தில் தூங்குகிறவள் நேற்றிரவு என்னோடு தூங்காமல் தன்னுடைய அம்மாவோடு தூங்கிவிட்டாள். நேற்று பகல் அவளை பள்ளிக்கூடத்திற்கு போய் சைக்கிளில் ஏற்றுவதற்காகக் காத்துக் கொண்டிருந்தபோது, நீலாவிற்கு படிப்பிக்கும் ரீச்சர் எதேச்சையாக என்னைச் சந்திக்க நேர்ந்தபோது, நான் அந்த ரீச்சரோடு கதைத்துக்கொண்டு நின்றேன். அந்த நேரத்தில் தான் நீலா பள்ளி முடித்து என்னைத் தேடி ஓடி வந்தாள். நான் கதைத்துக்கொண்டு நின்றதை என் அண்ணனிடம் மூட்டிக் கொடுத்திட்டாள். அண்ணன் நேற்று சாய்ந்தரமே என்னட்ட இந்த விடயம் பற்றிக் கேட்கும் போது நீலா சிரித்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடினவள். நான் அடிச்சுப் போட்டிடுவன் என்ற காரணத்தாலோ எனக்குப் பக்கத்தில் தூங்கவில்லை. அதனால் எந்த அரியண்டமும் இல்லாமல் நேரத்தோடு நேற்று தூங்கிவிட்டேன்.

எப்படி இருந்தாலும் காலையில என்னை எழுப்பி ஆக வேண்டிய கட்டாய நிலை நீலாவிற்கு.

நசுக்கிடாமல் பக்கத்தில் வந்து நீலா உட்காந்துகொண்டு சித்தப்பா... சித்தப்பா... பள்ளிக் கூடத்திற்கு நேரம் போய்ற்று எழும்புங்கோ.. என்று சொல்லிக்கொண்டு தனது வலது கையால் என்னுடைய உடம்பை அசைத்தாள். தூக்க அசதி விழிகளில் அப்படியே விலகாது இருந்தது. கண்ணைக் கசக்கிக்கொண்டு படுக்கையை விட்டு எழுந்தேன். எழுந்த கையோடு வந்த விசருக்கு அவளுக்கு செவிடுபறிய குடுக்கவேணும் போல் இருந்த கோபத்தை அடக்கிக் கொண்டு,

"ஏன்ரீ உங்கட அப்பாட்ட அண்டிக் குடுத்தனி" என்று நான் கேட்க...

"சொல்லித்தான் குடுப்பேன்... நீங்க என்னை சைக்கிளில் ஏத்திக்கொண்டு பள்ளிக் கூடத்தில இறக்கேக்கையும், பள்ளிக் கூடம் முடியும்போதும் ஒரு ரீச்சரோட மட்டும் நெடுக நெடுக நீங்கள் கதைக்கிறியள், அந்த ரீச்சர் எனக்கு அடிக்கிற ரீச்சர் என்று தெரியாதோ...?'

'உனக்கு அந்த ரீச்சர் அடிக்கிறது என்றால் நான் கதைக்கக்கூடாது என்று உன்ர சட்டமோ..? நேற்றுப் பின்னேரமே உங்கட அப்பா என்னட்ட ரீச்சரோட கதைச்சதைப் பற்றிக் கேட்டவர்...' அண்ணன் வேறு அர்த்தத்தோடு கேட்டிருப்பார் என்று நினைத்துக்கொண்டு நீலாவின்ர காதை என்னுடைய கையால் பிடிச்சு திருகினேன். நீலா கத்திக்கொண்டு அண்ணனைத் தேடி ஓடினாள். நான் எழும்பி பல்லைத் தீட்டியபடி குளிக்க கிணத்தடிக்குப் போனேன்.

நான் குளிச்சிட்டு வெளிக்கிட்டுக்கொண்டு அறையை விட்டு வரவும், நீலா புத்தகப்பையை கையிலே மாட்டிக்கொண்டு வரவும் சரியாக இருந்தது. நீலா வெளிவாசலில் நில்லு. நான் ஒன்றுக்கு இருந்துவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு வாறன் என்று சொல்லிக்கொண்டு கிணற்றடிப் பக்கமாக இருக்கும் மலசலகூடத்தை நோக்கிப் போனேன். நீலா வீட்டைவிட்டு இறங்கி எனக்காகக் காத்துக்கொண்டு நின்றாள். அண்ணன் இன்னும் வேலைக்குப் போகவில்லை போல. அண்ணனின் சத்தம் அறையில் இருந்து எனக்குக் கேட்டது. ஒன்றுக்கு இருந்துவிட்டு, சைக்கிளை எடுப்பதற்காக முன் விறாந்தையில் சுவரோடு சாத்தியிருந்த சைக்கிள் பக்கமாக வந்தேன். சைக்கிளின் முன் சில்லைப் பார்த்ததும் ஒரு கணம் இடிந்து போய்ற்றேன். சைக்கிளின் முன்சில் காற்றுப் போய் றிம்மில் நின்றது. வீட்டு வெளிவாசல் அடியில் நின்ற நீலா 'சித்தப்பா பள்ளிக்கு நேரம் போயிற்று கெதியாக வாங்கோ...' என்று என்னைக் கூப்பிட்டாள்.

'நில்லடி நீலா நான் வாறன்' என்று சொல்லிக் கொண்டு சைக்கிளை உருட்டிக்கொண்டு வாசல் பக்கமாகப் போனேன். சைக்கிளைப் பார்த்ததும் நீலா விக்கித்துப் போனாள். எனக்கு அவளைப் பார்த்ததும் ஒரு பொய்க் கோபம் வந்தது. அவளை வெருட்டுவதற்காக,

காத்தால இரண்டு முறை நீ வந்து என்னைச் சுற்றி சுற்றிப் பார்த்துக்கொண்டு திரியும்போதே நினைச்சிட்டன் நீ சைக்கிளுக்கு ஏதோ செய்து போட்டாய் என்று. இப்ப ஏதோ தெரியாத மாதிரி நடிக்கிற... நீயாடி காற்றைத் திறந்து விட்டனீ? ஒரு அதட்டலாய் என் வார்த்தை சீறிப்பாய...

'என்ர அம்மாவான... என்ர பரலோக மாதாவறிய... இல்ல சித்தப்பா எனக்குத் தெரியாது இப்பத்தான் உங்கட சைக்கிளைப் பாத்தனான். எனக்கென்ன கோபம் உங்களில சித்தப்பா?'

'என்ன கோபமா? ரீச்சரோடு கதைக்கிறன் என்று அண்ணன் கிட்ட நேற்று போட்டுக் கொடுத்தியல்ல...' 'அது ரீச்சரில இருந்த கோபம் சித்தப்பா. இப்ப பள்ளிக்கு நேரம் போய்ற்று. வாங்க சித்தப்பா போவம்.' வீட்டுக்குள்ளே இருந்து வெளி வாசலுக்கு ஓடி வந்த அம்மா -

'மோன கவனம் ஆமிக்காரன் பொடியல்... சுறுக்கா வந்திடு மோன...'

'ஓமன...' அம்மா என்று சொன்னேன்.

அம்மா வீட்டுக்குள்ள போக நீலாவைப் பார்த்துக்கொண்டு

'சரி சரி வா எல்லாத்துக்கும் உன்னைக் கவனிக்கிறன். இப்ப போய் சைக்கிளுக்குக் காத்தடிக்க ஐந்து ரூபா சித்தப்பா தரட்டாம் எண்டு சொல்லி உங்கட அப்பாக்கிட்ட வாங்கிற்று வா' அவள் காதில் விழுத்திய கையோடு வீட்டிற்குள் ஓடினாள்.

'துரராசாவின்ர கடையில காத்தடிக்க இருப்பத்தைஞ்சியம் தானே வரும், அதுக்கேன் இவன் ஐஞ்சு ரூபா கேட்கிறான். என்ன, புள்ளய கூட்டிக்கொண்டு போறதுக்கு சமபளமோ...?'

நீலா நான் சொல்லி விட்டதை கேட்டிருப்பாள் போல... அண்ணனின் குரல் வெளியில் நின்ற எனக்கு காதில் விழுந்து, வெடித்துச் சிதறியது அந்த வார்த்தை. எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் முழிச்சுக்கொண்டு நின்றேன். ஒரு கணம்தான் அந்த அச்சம்படர்ந்த உறைநிலை. திடீரென பொறி மின்னலாய் 'நீலா...!' நோர்வேச் சித்தப்பா காசனுப்பின பிறகு அந்த ஐஞ்சு ரூபாயும் தாறணெண்டு சொல்லு என்று அண்ணனின் காதில் பலமாக விழக்கூடிய மாதிரி கத்தினேன்.

'வேல வெட்டியில்லாமல் திரியிறான், எந்த உணர்வும் கிடையாது... குடும்பப் பொறுப்பும் கிடையாமல் தெருவில் திரியிறான்... ஆனா கோபம் மட்டும் சுருக்கெண்டு மூக்குமுட்ட வந்திடும்... ஐஞ்சு ரூபாய்க் காசுக்கு நோர்வேயில இருக்கிற தம்பியைச் சாட்டுற வடிவப்பார்... இந்தாடி நீலா இந்த ஐஞ்சு ரூபாயையும் அவனிட்ட குடடி...'

என் முகத்தில் அறைஞ்ச மாதிரி இருந்தது. என்ன செய்யிறது உழைப்பு பிழைப்பு இல்லாமல் வீட்டில ஓசியாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தால், எல்லாத்தையும் பொறுத்துக் கொண்டுதானே போகவேண்டும் என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டேன். நீலா காசை வாங்கிக்கொண்டு என்னைத்தேடி வெளியில் வந்தால். நானும் அவளுமாக சைக்கிளை உறுட்டிக்கொண்டு கடைக்கு வந்து சேர்ந்தோம். காத்தை அடிச்சு போட்டு ஐஞ்சு ரூபாவை துரராசா அண்ணனிடம் குடுக்க, அவர் தன்னட்ட சிலலறையில்லையென்று சொல்லி திரும்ப வரும்போது காசைத் தரச்சொன்னார். இனியெங்க அவருக்கு குடுக்கிறது... லாபம் எண்டு மனசுக்குள் நினைச்சுக்கொண்டு, ஐஞ்சு ரூபாவையும் பையில் வைத்துவிட்டு நீலாவை சயிக்கிளின் நடுவாறில் குறுக்காக இருத்திவிட்டு சையிக்கிளை மிதித்தேன்.

இப்போ சையிக்கிள் நாலு சந்தியைத் தாண்டி சோனகதெருவால் போய்க்கொண்டிருந்தது. ஐஞ்சு சந்தியால் திரும்பி தேத்தண்ணீக் கடையை தாண்டும்போது, வீதியோரத் தில் பொடியல் துவக்கோடு நின்றார்கள். ஒரு கணம் உயிர் உறைந்தது. ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு விழுந்தவன் போல் உடலின் யாசிப்பு. மழையில் நனைந்த கோழி போல் கூனிக் குறுகி நடுங்கினேன்.

'இண்டைக்கு என்ன இளவோ...! ஆற்ற கண்ணில முழிச்சேனோ தெரியாது... எல்லாம் துக்கமாய்த்தான் கிடக்கு...' நேறறு இப்படித்தான் சந்தியில நிண்டு போறவாற பொடியல புடிச்சவங்களெண்டு எங்கட வீட்டில கதைச்சவங்கள். எப்படித்தான் இருந்தாலும் நீலாவுக்கு நல்ல பயிற்சி ஏற்கனவே கொடுத்திட்ட சந்தோசம் என்ர மனசின் ஓரத்திலிருந்து விழித்துக் கொண்டது. நீலா கெட்டிக்காரி அப்படியேதும் தட்டுத் தவறி நடந்துவிட்டால் அவள் அழுது குளறி ஊரையே கூட்டி என்னைக் காப்பாற்றி விடுவாள் எண்டு மனதளவில் நினைத்தாலும் நலிந்த நம்பிக்கையோடு சையிக்கிளை மெதுவாக ஓட்டினேன்.

என்னவோ தெரியல அவங்க என்னைக் கண்டுகொள்ளவேயில்லை. மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்த யேசுவைப்போல் புதுப் பிறப்பெடுத்தேன். ஒரு பெரு மூச்சை விட்டுக்கொண்டு சீனியின்ர கடையைத் தாண்டி, கச்சான் கடைச் சந்தியால் இடப்பக்கமாக சயிக்கிளை திருப்பி வைத்தீஸ்வராக் கல்லூரி வழியாக நாங்கள் போய்க்கொண்டிருந்தோம்.

பொடியலின்ர பயத்தில நீலாவிடம் சொல்ல நினைத்த காரியம் மறந்து போய், நீலாவின் முகத்தை பார்க்க நீலா என்னை திரும்பிப் பார்த்தாள்.

'என்ன சித்தப்பா! இயக்கப் பொடியல கண்டுட்டு பயந்து போயிட்டீங்களா...? அதுக்குத்தானே உங்கட ஐடியா உடன எனக்கு வந்திடுமே... என்ர அப்பாவை விடுங்க... விடுங்க... எண்டு கத்திக் குளறுவேனே..."

"எனக்கு ஏதும் நடந்தால் உரையே கூப்பிடுவியெண்டு தெரியும்தான்... அதை விடு நீலா அந்த ரீச்சரின்ர கதைக்கு வாறன். ரீச்சரை எனக்கு எப்பிடித் தெரியுமெண்டு உனக்கு சொல்லுறன் இதுக்கு புறவாவது வீட்டில் வந்து அண்டிக் கொடுக்கக் கூடாது... என்ன...?"

'ம்... சித்தப்பா... நீங்க இரவில கதைசொல்லுறன் என்று, என்னைப்பத்தி சொல்லுறமாதிரி, எனக்குச் சொல்லவேண்டும்...'

"இல்லை இது உண்மையாய் நடந்ததை ஒளிவு மறைவில்லாமல் சொல்லுறன்"

"ஆரு சித்தப்பா.. அப்பாவையும் தங்கச்சியையும் இந்தியன் ஆமிக்காரன் சுட்டதெண்டு நீங்க என்ன பள்ளிக்கூடம் முடிய உரும்பிராய்க்கு கூட்டிக்கொண்டு போனீங்களே அந்தச் சினேகப் பொடியனைப் பற்றிய கதையா...?

"இல்ல.. இது முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட என்ர சினேகிதப் பொடியன் பற்றிய கதை. அவனும் நானும் ஓ. எல். ஒன்றாக ரீயூசன் சென்ரலில் படித்தபோது, பழக்கமானவன். நல்ல பொடியன் சோதனை எடுத்து முடிஞ்சாப் பிறகு நான் வீட்டோட இருந்துவிட்டேன். பரீட்சை முடிவைப் பார்த்து மேற்கொண்டு ஏதாவது செய்யலாமெண்ட நோக்கத்தோடு. ஆனா, இனியன் அப்பவே அவங்கட ஊர்ப்புள்ளய விரும்பித் திரிஞ்சவன். சோதினை எடுத்து முடிய அந்த பொட்டையை கூட்டிக்கொண்டு ஓடி. திரும்ப கிறிஸ்தவ முறைப்படி கோயிலில அடுத்தவருக்கு முன்னாலே வைச்சு சுவாமி கைப்பிடிச்சு விடடவர். இனியனுக்கு அதுக்குப் பிறகு செல்வி, மாறன் என்று இரண்டு குழந்தைகள் பிறந்தது. மீன்பிடித்தொழிலுக்கு போய் வந்த இனியனுக்கு திடீரென வெளிநாட்டிற்கு போக வேண்டும் என்ற ஆசை வந்தது. அதை நர்ன் பிழையென்று நினைக்கெல. அவனுடைய நிலையிலுள்ள எல்லா இளைஞர்களுக்கும் வருகின்ற ஆசைதான். வீட்டிலிருந்த நகைகளையும், காணியையும் விற்றும் பணம் பத்தாமல் சொந்தக் காரர்களிடம் கடனாய் பணம் வாங்கிக் கொண்டு, கனடா போய்ச் சேர்ந்தான். உழைத்து கடனளித்து ஊரில் வீடும் கட்டிக்கொடுத்தான். ஆனால் ஆசைப்பட்ட அவன் மனைவி பிள்ளைகளை எடுக்க முடியாத நிலை. அகதிமனு அவனுக்கு நிராகரிக்கப்பட்டது.அந்த காலகட்டத்தில்தான் அந்தோனி என்ற இனியனின் நண்பன் அவன் குடும்பத்துக்கு உதவிசெய்யத் தொடங்கி, கடசியில் இனியனின் மனைவிக்கு அந்தோனிக்கும் நெருக்கமான உறவு ஏற்பட்டு, கல்யாணத்தில் முடிந்தது. அந்தக் குழந்தை இரண்டையும் அன்பில்லாமல் தன்னுடைய வேலைக் காரர்களைப் போல நடத்தி வந்தாள். இந்த சம்பவங்களெல்லாம் கனடாவிலிருந்து பொறுத்துக் கொண்டிருக்க முடியாமல் வெளிநாட்டு வாழ்கையே வேணாமென்டு ஊர் திரும்பிவிட்டான் இனியன். நடந்த சம்பவமெல்லாத்தையும் ஒன்றும் மறைக்காமல் என்னிடம் ஒப்புவித்தான். யாரை, எனக்கு குற்றம் சொல்வதென்று எனக்கு புரியவில்லை... ஒருவேளை நீயும் என்னுடைய வயதை ஒத்தவளாக இப்போது இருந்தால், உனக்குள் ஓரளவு விளங்கிக் கொண்டிருப்பாய்.

(தொடர்ச்சி 7 ஆம் பக்கத்தில்)

(தொடர்ச்சி) நான் இந்தப் பிரச்சினையை விளங்கிக் கொண்டள வுக்கு உனக்கு சொன்னாலும் நீ கேட்கக் கூடிய பக்குவ நிலையிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இங்க வந்தவுடன் அவனுடைய மனைவியிடம் பிள்ளைகள் இரண்டையும் கேட்ட போது, அவள் எந்த மறுப்பும் தெரிவிக்காமல் இனியனிடம் கொடுத்து விட்டாள். அவனுடைய இரண்டு பிள்ளைகளையும் கொண்டு வந்து நீ படிக்கிற பாடசாலையில சேர்த்து அங்கேயே தங்கவும் ஏற்பாடு செய்துவிட்டான். அவங்கட ஊரிலயிருந்து யாழ்ப்பாணம் வந்தால், என்னோடுதான் திரிவான். பிள்ளைகளை பார்க்கப் போகும்போது, நானும் அவன் கூடவே உங்கட பள்ளிக்கூடத்தில் இருக்கிற கொஸ்டலுக்கு போறனான். அப்படிப் போய் வருகிற போதுதான் உங்கட ரீச்சரையும் தெரிய வேண்டி வந்தது. எப்ப உங்கட ரீச்சர் என்னைக் கண்டாலும் இனியனின் பிள்ளைகள் பற்றித்தான் கதைப்பா... அதைவிட எந்தக் கதையும் வைத்துக் கொள்வதில்லை. இப்ப விளங்கிற்றா நீலா...?"

"ஓம்... சித்தப்பா! பாவமென்ன அந்தப் புள்ளயல்... அவங்கட அம்மா அவங்களை பார்க்கிறதில்லையா?"

"இல்ல நீலா... அவங்கட அம்மா இனியனின் நண்பனைக் கல்யாணம் செய்த பிறகு தன்ர சொந்தப் பிள்ளைகளையே வெறுத்துப் போட்டா..."

"ஏன் சித்தப்பா...?"

"தெரியல... ஒருவேளை நான் நினைக்கிறேன் தன்னுடைய இரண்டு பிள்ளைகளை விட அவ ஏதோ இனியனின் நண்பனிட்ட கண்டுபிடிச்சிருக்கிறா போல..."

"உம்"

"என்ன நீலா உம் போடுறாய்...?"

"இல்ல சித்தப்பா உங்கட நண்பற்ற கதையை கேட்க அழுகைதான் வருகுது..."

"நீலா உனக்கு அழுகை வருவுதோ என்னவோ, எனிமேல் உங்களின்ர ரீச்சரோடு கதைக்கிறதை மட்டும் வீட்டில போய் சொல்லக் கூடாது... என்ன?"

"ஓம் சித்தப்பா எனிமேல் அந்தக் கதையை கதைக்கவே மாட்டேன்." என்றாள் நீலா.

என்னுடைய சையிக்கிள் இப்போது ஆஸ்பத்திரி வீதி வழியில் சென்று இடப்பக்கமாகச் சென்றது.

நீலா என்ன காரணமோ தெரியவில்லை ஒன்றும் பேசாமல் சையிக்கிளில் இருந்தாள். சிலவேளை நான் எரிஞ்சு விழுவன் என்ற நினைப்பிலோ அல்லது இனியனின் கதையைக் கேட்ட பிறகோ அப்படி அமைதிச் சூழலில் இருந்த அவளிடம் பள்ளிக்கூடம் கிட்டவர சையிக்கிளின் ஓட்டத்தின் வேகத்தை குறைத்துக் கொண்டு நானே கதையைத் தொடங்கினேன்...

"நீலா! இந்த நத்தாருக்கு என்ன வாங்கித்தர...?"

"சித்தப்பா நீங்க இப்படித்தான் நெடுக நெடுக கேப்பீங்க ஆனா வாங்கித் தரமாட்டீங்க நீங்க கஞ்சன்..."

"நானே உங்கட அப்பம்மா கைச்செலவுக்கு தாற காசில தான் என்ர காலமே போகுது... உனக்கு வாங்கித்தர ஆசையாக இருந்தாலும் கையில காசு இருக்கவேணுமே"

சையிக்கிள் பள்ளிக்கூடத்தின் வாசலடிக்கு வந்துவிட்டது. சையிக்கிளிலிருந்து நீலாவை என்னுடைய முழுப்பலத்தையும் வைத்து கைத்தாங்கலாய் தூக்கி கீழே இறக்கிவிட்டேன். அவள் எனக்கு போய்ற்று வாறேன் என்று சொல்லிக்கொண்டு பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடவும், இனியனின் இரு பிள்ளைகளும் எனக்கு பக்கம் ஓடிவரவும் சரியாக இருந்தது.

"மாமா எங்கட அப்பாவைக் கண்டியல...?"

என்று இனியனின் மூத்த மகன் வாஞ்சையோடு என்னிடம் கேட்ட போது, முகம் வாடி கண்கள் உள்ளொடுங்கி வறுமையின் சுவடு இழைந்திருந்தது. ஒற்றை வார்த்தையில் பதிலைச் சொல்லிவிட்டு நகர என்னால் முடியவில்லை. நான் வளர்ந்த விதம் அப்படி. என் கண்களில் மேகத்திரள். நெஞ்சில் இனியனின் நினைவு சட்டென மின்னியது.

ஒரு மாதத்திற்கு முதல் இனியன் மறுமணம் செய்து கொண்டு யாழ்ப்பாணம் வந்தபோது தான் புதிதாக மணம் முடித்த விடயத்தையும், தன் மனைவியையும் அறிமுகம் செய்ததோடு கிறீம் கவுஸ்சுக்கு கூட்டிக் கொண்டுபோய் ஐஸ்கிறீமும் வாங்கித் தந்தான். அதன் பின்னாடி ஒரு வாரத்திற்கு முதல் என்னைச் சந்திக்க வீட்டிற்கு வந்தபோது தானும் தன் மனைவியும் இந்தியாவிற்கு அகதியாக போறதுக்கு படகுக்கு ஒழுங்குபடுத்தும்படி கேட்டான். நான் பாசையூருக்கு இனியனையும் கூட்டிக்கொண்டு போய் இந்தியாவுக்கு அகதிகளை ஏற்றிக் கொண்டு செல்கிற போட்டுக்காரரை தேடிப்பிடிச்சு இனியனுக்கு அறிமுகப்படுத்தியும் விட்டேன். அன்றிரவே பொழுதும் சாயும் வேளை கூட்டிக்கொண்டு போவதாகவும், தன்னுடைய வீட்டுக்கே வரும்படி போட்டுக்கார சம்மாட்டியார் சொன்னார்.

பொழுது சாயும் முன்னமே நான் ஒரு சயிக்கிளிலும் இனியனும் அவன் மனைவியும் ஒரு சயிக்கிளிலுமாக பாசையூருக்கு புறப்பட்டோம். வரும் வழியிலேயே ரீசனில் படித்த காலத்தில் திரிந்த இடங்களையெல்லாம் நினைவுபடுத்திக்கொண்டு வந்தான். பழைய நினைவுகளில் மூழ்குவது எனக்கு அலாதியாய் இருந்தது.

சம்மாட்டியின் வீட்டிற்கு போகும் வழியிலே பாசையூர் அந்தோனியார் கோயில் இருந்ததால், இனியனும் மனைவியும் கோயிலுக்குள் போய் மன்றாடிப்போட்டு மெழுகுதிரியை கொழுத்திப் போட்டு வெளியில் வந்தார்கள். நான் கோயிலுக்குள் போகவில்லை. நான் ஒரு இடதுசாரிப் போக்குள்ளவன் என்பது இனியனுக்கு தெரியுமென்பதால் அவன் என்னை வற்புறுத்தவில்லை. சம்மாட்டி வீட்டிற்குச் சென்று அங்கிருந்து கடற்கரைக்கு போய்ச் சேர்ந்தோம். இந்தியாவிற்கு படகில் அனுப்பி வைத்துவிட்டு கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, வீடு திரும்பினேன். என்பாட்டிற்கு யோசனையில் மிதந்த போது பள்ளிக்கூட பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு போன மினிவானொன்று எழுப்பிய ஒலிச்சத்தத்தில் நினைவு டைந்து என் பக்கம் நின்ற இனியனின் பிள்ளைகளைப் பார்த்தேன். என்னைப் பார்த்தபடி சிலையாய் நின்றார்கள். எனக்குள் கருக்கொண்டது துயர இருள்... துயரமா...? அது சொல்லி மாளாத துயரம். இயேசுவை சிலுவையில் ஆணியால் அறைந்தது போல்.

# இலக்கிய முத்து



தமிழ்மாறன், அவனுக்கோ தீராத பற்று தண்டமிழ்ப் புலவர்பால் வருத்தி வரும் வண்ணத்தமிழ்ப் புலவர்களிற்கு ஈய்ந்து அவர்தம் திருந்திய முகம் கண்டு திளைப் பதில் அவனுக்கு அலாதிப்பிரியம்.

மலர்மதி அவன் மனைவி. அவளை மரமதி என்றாலும் பொருந்தும். இருவரது இல்லறத்தில் பேச்சளவில்தான் மாறன் இல்லத்தலைவன். மாறன் ஒரு சாதாரண போர்வீரன், மலர்மதிதான் கட்டளையிடும் தளபதி.

தீந்தமிழால் மாறன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட ஔவையை வாசல் வரை அழைத்து வந்த போதுதான் பூசல் ஒன்று இடம்பெறப் போவதை உணர்ந்தான். சமையலறையில் இருக்கும் பொருட்களெல்லாம் தன்தலையைப் பதம்பார்க்கும் பழைய சம்பவங்கள் மனத்திரையில் ஓடின.

தனது இல்லறத்தின் இரகசியங்கள் எல்லாம் பரகசியப் படுவதை விரும்பாத

## விருந்துபசாரம்!

மாறன் ஆசையாய் அழைததுவந்த ஔவையை அருகில் இருந்த மரநிழலில் அமர்த்திவிட்டு உள்ளே சென்றான்.

ஆசனத்தில் அழகுப்பதுமையாக அமர்ந்திருந்தாள் மலர்மதி. அழகு இருந்தென்ன அறிவு இருக்கா? தனக்குள்ளே சிந்தித்தான் மாறன். மலர்மதிக்கு இது தெரிந்தால்...? அருகில் சென்றான் மாறன் அவளை அணைத்துக்கொண்டதும் அச்சம். நடுங்கின விரல்கள். தளர்ந்தது குரல். கண்... ணே, மா...னே அழைக்கும் குரலில் அச்சம் ஒலித்தது. நடுங்கும் கைகள் தயங்கித் தயங்கி நகர்ந்தன, மலர்மதியின் இடையில் அழகு பொலிந்திருந்தும் அனுபவிக்க முடியாதவன் நீ, அவன் மனம் கேலிசெய்தது. மறுகையோ கார்கூந்தலினுள் நெளிவுகளிடையே ஏதோ தேடியது. நிமிர்ந்தாள் மலர்மதி. அவள் பார்வையில் நிகழப்போகும் விபரீதத்தை உணர்ந்தான் மாறன். 'உம் எதற்காக இந்த ஐஸ்? விடயத்தைக் கூறலாம்' என்றாள் மலர்மதி.

மரத்துப் போன துணிவையெல்லாம் ஒன்று சேர்த்த மாறன் வந்...து, வந்...து விருந்தினர் ஒருவர் அவர் அரும்பசி களைய வேண்டும் என்றான். அவ்வளவு தான். அமர்க்களமாகியது அந்தஅறை. எந்தக் கண்ணகி அன்று பாண்டியன் முன்னின்றாளோ அந்தக் கண்ணகிக்கு அக்காவானாள் மலர்மதி.

சமையலறையில் இருந்த சுளகினைச் சாட்டையாகப் பிடித்தாள். தாக்கினாள் மாறனை, விரட்டி விரட்டி சுளகு உடையும் வரை புடைக்கப்பட்டான் மாறன். பூசை முடிந்ததும், ஆசையின்றி, அழைத்துவா ஔவையை என்றாள்.

ஓடோடிச் சென்றான் மாறன் ஔவைப்பாட்டியிடம். ஆனால் பாட்டியோ பூட்டிவைக்கப்பட்டு, வேண்டிய அடிகளை சாளரத்தினூடு பார்த்துவிட்டாள். தம்பி என்ன சத்தம் அறையில் என்றாள் பாட்டி. ஒன்றுமில்லைப் பாட்டி என்மனைவி அரிசி புடைத்தாள் என்றான் மாறன். நீதான் அரிசி, தெரியும் எனத் தனக்குள்ளே எண்ணினாள் தமிழ்க்கிழவி.

உண்பதற்கு அமர்ந்தாள் தமிழின் தீஞ்சுவை நாயகி. மாறனின் மனைவி உணவு பரிமாறினாள் - இல்லை கொட்டித் தீர்த்தாள். இலையில் வீழ்ந்த சாதத்திகழ்கள் ஏதோ சாதனை படைப்பது போல பாட்டிக்கு மேலாகப் பாய்ந்தன. கொட்டிய கறிகள் இலையில் பட்டுத் தெறித்து தமிழ்ப்பாவையின் வதனத்தில் வண்ணமையிட்டன.

எழுந்த காழ்ப்புணர்வை விழுங்கி, ஒருவாறு அருந்தி முடித்தாள் தமிழ்ப்பாட்டி. செந்தமிழ்ச் செல்விக்கு தீங்சுவை உணவளித்ததாக பெருமிதம் கொண்ட மாறன் ஒரு கவி பாடும்படி பணிந்து நின்றான் ஔவையிடம். பாடினாள் தமிழ்ச் செல்வி-

**"இருந்து முகந்திருந்தி யீரோடு பேன் வாங்கி**
**விருந்து வந்த தென்று விளம்ப - வருந்தி மிக**
**ஆடினாள் பாடினாள் ளாடிப் பழமுறத்தால்**
**சாடினா ளோடோடத்தான்"**

**(தனிப்பாடற்திரட்டு)**

**-லெஸ்லி**

---

ஒரு நாளின் ஒவ்வொரு விநாடியும் பயன் உள்ளவைதான். யாரும் விநாடிகள் கழிவதனை கணக்கிலெடுப்பதில்லை. நாட்கள் கழிவதையே கணக்கிலெடுக்கின்றார்கள். ஒவ்வொரு விநாடியும் கவனத்திலெடுத்து செயற்படுவது அவசியமானதாகும்.

கடிகாரத்தின் மூன்று கம்பிகளும் தொடர்ச்சியாக இயங்கி

## சுற்றும் சுழலும்

னால் மட்டுமே கடிகாரம் ஒழுங்காக வேலை செய்யும். பெரிய கம்பி சிறிய வேலையைச் செய்கின்றது (நிமிடத்தைக்காட் டுகிறது) என்ற பிரச்சினையோ, கடிகாரத்தின் சிறிய கம்பி பெரிய வேலை செய்கின்றது என்ற கர்வமோ (மணித்தியாலத்தைக் காட்டுதல்) கடிகாரக் கம்பிகளுக்கு ஏற்படுவதில்லை. இவை தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டால்தான் நல்ல நேரம் கெட்ட நேரத்தை மனிதன் அறிந்துகொள்ளலாம்.

மனிதனுக்கு நல்ல நேரம் கெட்ட நேரத்தைக் காட்டுவதன் மூலம் தான், தன்னுடைய நேரத்தைக் கடிகாரம் காப்பாற்றிக் கொள்ளலாம். மூன்று கம்பிகளும் ஒரே நேரம் சந்திக்கின்றது. மூன்று கம்பிகளும் அந்த நிகழ்வுக்காக எவ்வாறு தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒற்றுமையின் பலத்தை அவசியத்தை உணர்த்துகின்றதல்லவா.

பன்னிரெண்டு மணிக்கு ஒன்றாக மூன்று கம்பிகளும் சந்திப்பதற்காக எத்தனை தடைவைகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. கடினமான தொடர்ச்சியான முயற்சியால் ஒன்று சேர்ந்து விடுகின்றன. மீண்டும் அந்த நேரத்திற்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

**-நகுலன்**

# இரண்டு மனநிலைகள்

## நடந்து கொண்டேயிரு!

**(கொங்கோ நாட்டுக் கவிதை)**

என்னுடைய மண்ணிலிருந்து தான்
நீ வந்திருக்க வேண்டும்
உன் புருவங்களைச் சூழ
துடித்துக்கொண்டிருக்கும்
உன் ஆன்மாவில்
அதனைக் காண்கின்றேன்
அதையும் விட
துக்கமாயிருக்கும் வேளைகளில்
நீ நடனமிடுகிறாய்
என்னுடைய மண்ணில் இருந்து தான்
நீ வந்திருக்க வேண்டும்



நடந்துகொண்டேயிரு
காலம்
எம்மை அணைக்க
காத்திருக்கிறது,
உன்
விளக்கில் எரியும் எண்ணை
உண்மையில்
குமுறிக்கொண்டிருக்கும்
என் குருதி தான் என்பதையும்
அது பொங்கி வழிந்தால்
நீ
விளக்கை ஏற்றக்கூடாது
என்பதையும்
இதிலிருந்து தெரிந்து கொள்,

எம் புராதன வழிபாட்டுக்கென,
இருண்ட மூலையொன்று
எங்களுக்கு வேண்டும்

ஒரு தொப்புள் கொடியிலிருந்து தான்
எல்லாருமே வந்தோம்
கோலம் கெட்ட எம் தலைகளை
எங்கே பெற்றோம் என்பது
யாருக்கு தெரியும்?

அயடின் வீச்சம் கொண்ட
இந்த மௌனங்கள்
அநேகமான வேளைகளிலே
துன்மார்க்கமான முடிவுகளால்
எம்மைப் பாழ்படுத்துகின்றன
ஏனென்றால்

தாடி இல்லாத
என் மனச்சாட்சியோ
எங்களை மட்டுமே
பாழ்படுத்துகிறது.

**ஆங்கிலத் தலைப்பு:- Keep Moving**
**எழுதியவர்:- ச்சாயா யூ ராம்ஸி**

## காற்றினுடைய ஆன்மாக்கள்

**(நைஜீரிய நாட்டுக் கவிதை)**



கொக்குகள்
இப்போது திரும்பி வருகின்றன
அமைதியான வானிலே
வெள்ளைப் புள்ளிகளாய்...
இங்கே மழை பெய்தபோது
தங்கள் வீடுகளைக் கட்ட
நல்ல காலநிலை தேடி
வடக்கே சென்றிருந்தன

காற்றினுடைய ஆன்மாக்கள்
திரும்பவும் என்னோடிருக்கின்றன,
கட்டுப்படுத்தும் கடவுளின்
கைகளுக்கு அப்பால்
வடக்கு கிழக்கு மேற்காய்
உள்ளுணர்வு வழிகாட்ட
அவை சென்றிருந்தன

ஆனால்
கடவுளர் ஆணைப்படி
இந்தக் கல்லின் மேல்
நான் குந்திக் கொண்டிருக்கிறேன்
விடியலிருந்து மாலை வரை
அவை வந்து போவதை
உள்ளிருக்கும் ஆன்மா
துடித்துக்கொண்டிருக்க
நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தூண்டுதலில்
ஒரு சிவப்புத் தடாகம்
அலைபாய்கிறது
ஒவ்வொரு சிற்றலையுமே
உள்ளுணர்வு விடுக்கும்
முக்கிய அழைப்புத்தான்
மில்லியன் கலங்களிலே
ஏக்கம் அடைபட்டிருக்கிறது

ஓ!
என்னுடையதும் கடவுளரதும்
கடவுளே
சுருண்ட தலை முடிக்கும்
இருண்ட தோலுக்கும்
உள்ளே
சிறைப்பட்டிருப்பதால்
இந்தப்
பிரார்த்தனை மணி அழைப்புக்கு
நான் செவிசாய்க்கக் கூடாதா?

**ஆங்கிலத் தலைப்பு:- Spirit of The wird**
**எழுதியவர்:- கபிரியல் ஒக்காரா.**

**தமிழில் - வின்சென்ற் புளோறன்ஸ்**

சர்வதேச அரசியலில்...

கே.ரீ.கணேசலிங்கம்

# டிக் செனியின் கிழக்காசிய விஜயத்தின் அரசியல் உள்நோக்கம் யாது?

ஒரு தனிமனிதன் வெற்றிவாய்ப்புக்களால் பிரபல்யம் அடைவது போன்று அதிக நெருக்கடியால் பேசப்படுபவராகக் காணப்படுவார். சமகால உலக அரசியலில் அத்தகைய நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ள பிரபலமாக அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ் காணப்படுகின்றார். ஈராக் அரசியல் இராணுவ நெருக்கடி, பலஸ்தீனம் - இஸ்ரேல் பற்றிய நெருக்கடி, வடகொரிய அரசியல் நெருக்கடி என ஒன்றுக்குமேல் ஒன்றாக ஆபத்துக்களை சந்தித்து வருபவராக புஷ் விளங்குகின்றார். அமெரிக்க ஜனாதிபதியின் கட்சி நலன், மக்கள் நலன், ஆளும் வர்க்கத்தின் நலன் என்பவற்றுக்கு அப்பால் இரண்டு நலன்கள் முதன்மையடைந்திருக்கும். ஒன்று ஜனாதிபதிப் பதவியைத் தக்க வைப்பதற்கான நலன், மற்றயது தேசத்தின் மீதான நலன் என்பன காணப்படும். இத்தேசத்தின் மேலான நலனை புஷ் எப்படி பாதுகாக்க திட்டமிடுகிறார். என்பதை விரிவாக நோக்குவோம்.

அமெரிக்க உதவி ஜனாதிபதி டிக் செனி கிழக்காசியாவுக்கான அரச முறைப்பயணத்தை மேற்கொண்டதுடன் ஏனைய சில நாடுகளுக்கும் பயணம் செய்தார். அவரது கிழக்காசியப் பயணம் நிகழ்ந்தபோது இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் அமெரிக்காவிற்கு சென்றிருந்ததுடன் பில்லேடன் ஐரோப்பாவுடன் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு தயார் என அறிவித்திருந்தார். அப்போது ஈராக்கில் அமெரிக்கா அடங்கிய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக பெரும்போர் ஒன்று நிகழ்ந்து ஓய்ந்துகொண்டிருந்தது. இதனால் டிக் செனியின் விஜயம் பெரிதாக பேசப்படாத அம்சமாக அமைந்துவிட்டது. ஆனால், எல்லா விடயங்களையும் காட்டிலும் டிக் செனியின் நடவடிக்கையே தந்திரமானதும், அரசியல் நோக்கம் நிறைந்ததொன்றாகவும் காணப்பட்டிருந்தது. அதிலும் குறிப்பாக ஏனைய நாடுகளைவிட ஜப்பானுக்கும், சீனாவுக்கும் அவரது விஜயம் பெரும் அரசியல் நகர்வுகளை சாத்தியப்படுத்தியது. அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

ஜப்பான் தனது படைகளை ஈராக்கிலிருந்து விலக்கிக்கொள்வதற்காக இருந்த சந்தர்ப்பத்திலேயே அமெரிக்க உப ஜனாதிபதி அங்கே சென்றிருந்தார். ஜப்பானியரை ஈராக்கிய கிளர்சியாளர்கள் கடத்தி வைத்திருந்த சந்தர்ப்பத்தில் ஜப்பானிய மக்கள் அரசாங்கத்திற்கு நெருக்கடியைத் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள். ஒரு கட்டத்தில் படைகளை விலக்கிக் கொள்வதற்கான அறிவிப்பு வெளிவரலாம் என மக்களும் ஈராக்கிய கிளர்ச்சியாளர்களும், நம்பிக்கொண்டே இருந்தனர்.

ஆனால், அதற்கிடையில் அமெரிக்க நிர்வாகம் டிக் செனியை ஜப்பானுக்கு அனுப்புவதற்காக முடிவெடுத்து உடனடியாக அறிவிப்பை வெளியிட்டது. இதனை கேள்வியுற்ற ஜப்பானிய மக்கள் குழப்பமடைந்தனர். ஆட்சியாளர்களிடையே நிகழ்ந்த இரகசிய நடவடிக்கையால் ஜப்பானிய அரசு கைவிடப்பட்டது.

இது மட்டுமல்ல, ஜப்பானிய - அமெரிக்க நெருக்கம் எப்படியானதென்பதை இந்த விஜயம் ஜப்பானுக்கும் உலகுக்கும் வெளிப்படுத்தியது. மேலும் ஜப்பானியர் அமெரிக்காவின் நலன்களுக்காகத் தம்மை இழக்கவும், தயாரானவர்கள் என்பதை புலப்படுத்தியது. இராணுவ ஆக்கிரமிப்பில் ஜப்பானும் அமெரிக்காவும் ஒன்று என்பதை கோடிட்டுக் காட்டிய விஜயமாக டிக் செனியின் சம்பவம் உணர்த்தியது.

இரண்டாவது கிழக்காசிய அரசாக சீனாவை அமெரிக்கா அடையாளப்படுத்தியது. முதலில் ஜப்பான் என்பதை உணர்த்திய அம்சமாகவும் நோக்கமுடியும். எதுவாயினும், சீனாவை மீறமுடியாத நிலை காணப்பட்டது என்பதையும் இது உணர்த்தியது. ஆனால், சீனாவுக்கு சென்ற டிக் செனி வடகொரிய அரசியல் விவகாரத்தை கையாண்டது குறிப்பாக வடகொரியாவின் நடவடிக்கையை கண்டித்ததுடன் அது தொடர்பாக கடந்த காலத்தில் சீனா எடுத்த நடவடிக்கைகளை அமெரிக்க உப ஜனாதிபதி பாராட்டினார். அவரது பாராட்டுடன் வடகொரியா அணு ஆயுத உற்பத்தி தொடர்பான தகவல்களையும் வெளியிட்டார். குறிப்பாக 10 வருடத்திற்கு முன்பே வடகொரியா அணு ஆயுத உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டது என்றும் அது மிகவும் அண்மையில் முழுமையாக பூர்த்தியாகும் என்பதையும் டிக் செனி வெளிப்படுத்தினார். வடகொரியாவின் ஆயுத உற்பத்தியானது இந்தப் பிராந்தியத்திற்கும் உலகத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும் என செனி குறிப்பிடத்தவறவில்லை.

இவ்வாறு எல்லாம் ஏன் டிக் செனி சீனாவுடன் உரையாடவேண்டும் என்பதே முக்கிய கேள்வியாக உள்ளது. உண்மையில் டிக் செனி சீனாவின் போக்கைப் பற்றியும் அது கிழக்காசியாவில் கொண்டிருந்த அரசியல் இராணுவபலம் பற்றியும் புரிந்து கொண்டிருப்பதோடு வடகொரியா விவகாரத்தில் சீனாவின் அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதுடன் அதனால், ஏனைய பிராந்தியங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடி அமெரிக்கா முகம் கொடுப்பது போன்று நேரடியாக முகம் கொடுக்க முடியாத நிலை இருப்பதையும் மறைமுகமாக ஏற்றுக்கொள்வதையே காட்டுகின்றது. அது மட்டுமன்றி இந்த சந்தர்ப்பத்தை வடகொரிய விடயத்தை அமெரிக்கா நேரடியாக கையாள முயலுமாயின், அதிக ஆபத்தையும் அபாயங்களையும் எதிர்நோக்கும் நிலை எற்படும் என்ற கருத்தையே செனி வெளிப்படுத்தியிருந்தார்.

இது அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் ஒரு வகையான தந்திரமாகவே விளங்குகின்றது. முழுப்பிராந்தியமும் ஒன்றாக அமெரிக்காவிற்கும் அதன் நட்புச் சக்திகளுக்கும் எதிராக கொள்வது கடினம். அத்தோடு கிளர்ச்சிகள், எதிரான புரட்சிகள் அனைத்தும் வெற்றியடையும் நிலையும் சாத்தியப்படும். இதனால், சீனாவிடம் நட்புக்கரம் நீட்டிக்கொண்டு கிழக்காசிய அரசியலில் தற்காலிகமாக பின்வாங்கியுள்ளது. இது நிரந்தரமானதுமல்ல. பின்வாங்கலுமல்ல. சீனாவின் நிரந்தர நட்புப் பட்டியலில் அமெரிக்கா இணைத்துக்கொண்டதுமல்ல. கிழக்காசியாவின் சினாவுக்குரிய பலத்தை ஏற்றுக் கொண்டதுமல்ல.

இவற்றைவிட டிக் செனி வடகொரியா, மற்றும் ஈராக், பலஸ்தீனியப் பிரச்சினைகளை மறைப்பதற்கு தைவான் விவகாரத்தை முதன்மைப்படுத்தியிருந்ததுடன், இராணுவ ரீதியில் தைவானுக்கும் அமெரிக்காவுக்குமான உறவை அடியோடு நிராகரித்தார். ஆனால், தைவானில் இராணுவ ரீதியான முழுமையான வளர்சிக்கும் அமெரிக்காவே அடிப்படைப் பலத்தை கொடுத்தது என்பது கடந்த காலங்களில் இரண்டு அரசுகளும் மேற்கொண்ட உடன்படிக்கைகள் மூலம் அறியமுடிகின்றது. ஏவுகணை தொழில்நுட்பம், விமான எதிர்ப்பு ஏவுகணை தொழில்நுட்பம் மற்றும் சட்லைட்டின் உதவியுடனான ஏவுகணைத் தாக்குதல் உத்திகள் இராணுவ கடற்படை ஒத்திகைகள் என இரண்டு அரசுகளுக்கும் இடையில் பாரிய இராணுவ அரசியல் நெருக்கம் நிலவுகின்றது. ஆனால், வடகொரியா விடயத்தில் சீனா விட்டுக்கொடுப்பைக் காட்டினால் தைவான் விடயத்தில் அமெரிக்கா விட்டுக்கொடுப்பைக் காட்டும் என்பதுபோலவே டிக் செனியின் உரையாடல் அமைந்திருந்தது.

இந்த விடயத்தை சீனா எப்படி அணுகியது என்பதைக் குறிப்பிடுவது அவசியம் அமெரிக்கா சீனாவை ஏமாற்ற எடுத்த முயற்சியை சீனா தனக்கு சாதகமாக மாற்ற ஈராக் விவகாரத்தை முதன்மைப்படுத்தி ஈராக்கின் நிர்வாகத்தையும் அதிகார ஆட்சியையும், ஈராக்கியரிடம் ஒப்படைக்கப்போவதாக அமெரிக்கா, பிரிட்டன் என்பன கூறிவருகின்றன. ஆனால், சீனாவும் ஜூன் 30 களில் அமெரிக்கா ஒப்படைக்கவுள்ள அதிகாரத்தை ஈராக்கிடமன்றி ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் அது இறைமையும் தன்னாதிக்கமும் உடைய ஆட்சியாக அமையவேண்டும் என கோரியுள்ளது. டிக் செனி சீனா கொடுத்த நெருக்கடியாகவும் நிச்சயமாக ஈராக்கியரிடம் அமெரிக்கர்கள் ஆட்சி அதிகாரத்தை கொடுக்கமாட்டார்கள் என்பதையும் சீனா கோடிட்டுக் காட்டிவிட்டதும் டிக் செனி எதிர்கொண்ட சவாலாக அமைந்துவிட்டது. அவ்வாறு அவர்கள் ஈராக்கியரிடம் கொடுப்பதாக கூறிக்கொண்டு அமெரிக்கர்கள் தங்கள் செல்வாக்குக்குள் அகப்பட்டுள்ள பொம்மைகளிடமே ஆட்சியை ஒப்படைக்க தயாராகிவிட்டதை சீனா வெளிப்படுத்தியுள்ளது.

எது எவ்வாறு விளங்கினாலும் டிக் செனியின் பயணம் அமெரிக்காவிற்கு தற்காலிக மன சாந்தியை கிழக்காசியாவில் மட்டுமல்ல முழு உலகத்திலேயுமே ஏற்படுத்தியுள்ளதை கூறலாம். மேற்காசியாவை கையாளும் போக்கில் அமெரிக்கர்களது நகர்வு அமைந்துள்ளது. ஜனாதிபதி புஷ் அடுத்த தேர்திலில் வெற்றிபெறுவது கடினம் என்பதையும் டிக் செனியின் விஜயம் உணர்த்த தவறவில்லை. செப்ரம்பர் 11 தாக்குதல் தொடர்பாக ஏற்கனவே புஷ்ஷும் அவரது கூட்டமும் விசாரணைக் குழுக்களால் சல்லடை போட்டு விசாரிக்கப்படுகின்றது. இது உள்நாட்டிலும் உலக மட்டத்திலும் அதிக பாதிப்பை புஷ்ஷுக்கு ஏற்படுத்திவிட்டது. ஆனால், புஷ் அமெரிக்க நலனை விட்டுக் கொடுக்காதவராக செயற்பட்டு வருவது கவனிக்கத்தக்கது. புஷ் தேர்தலில் தோற்றுப்போனாலும், அமெரிக்கா தோற்றுவிடக்கூடாது என்பதில் அக்கறையாக உள்ளார். இது மேற்கு நாட்டவரின் அரசியல் நாகரிகத்தின் ஓர் அம்சம் என்பதை கற்றுக் கொள்வதில் நாம் தவறக்கூடாது.

## 'தாரண' புத்தாண்டு உங்களுக்கு எப்படி?

**தமிழ் வருடங்கள் மொத்தம் 60. சித்திரை முதல் பங்குனிவரை ஒரு ஆண்டாகக் கணக்கிடப்படுகிறது. சித்திரை மாதம் சூரியன் மேடராசியில் நுழையும் நாளே சித்திரை விஷு என்னும் தமிழ்ப் புத்தாண்டு தினம். 12 ராசிகளிலும் வலம் வரும் சூரியன் தங்கியிருக்கும் காலம் தான் ஒரு மாதம். தற்போது சுபானு ஆண்டு முடிந்து, தாரண ஆண்டு 13.04.2004 பிறந்துள்ளது. தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று சூரியன் பூமியின் அருகில் இருக்கும். இது ஒரு புனிதமான நாள். இந்தத் தாரண ஆண்டின் குரு பெயர்ச்சியும், ராகு, கேது பெயர்ச்சியும் நிகழ்ந்துள்ளது. ஆண்டின் தொடக்கத்தில் கிரகங்களின் ஒன்றான குரு பகவான் சிம்மராசியில் இருக்கின்றான். அவர் 15.08.2004 அன்று கன்னிராசிக்குச் செல்கின்றார்.**

**அடுத்து ராகு - கேது இடப்பெயர்ச்சி 5.02.2005 அன்று நிகழ்கின்றது. தற்போது மேடராசியில் இருக்கும் ராகு, அன்றைய தினம் மீனராசிக்கு மாறுகின்றார். அந்தச் சமயம் கேது துலாம் ராசியிலிருந்து கன்னி ராசிக்கு இடம்பெயர்கின்றார். இன்னொரு அதிமுக்கிய கிரகமான சனி ஆண்டு முழுவதும் மிதுனராசியில் தான் பிரவேசிக்கின்றார். இந்த முக்கிய கிரகங்களின் இருப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் புத்தாண்டுப் பலன் கணிக்கப்பட்டுள்ளது. குருவின் பார்வைக்கு அதிக சக்தி உண்டு. சில ராசியினருக்கு இந்த நான்கு முக்கிய கிரகங்களும் சிறப்பான இடத்தில் இல்லாமற்போகலாம். அவர்கள் கவலைப்படவேண்டாம். விரைவாகச் சுழலும் சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நற்பலனைக் கொடுக்கும்.**

**தமிழ்நாட்டிலிருந்து பிரபல ஜோதிடர்**
**பண்டித காழியூர் நாராயணன்**

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



சுயகௌரவம் கொண்ட கும்ப ராசி அன்பர்கள்! தன்கையே தனக்குதவி என்ற கொள்கை கொண்டவர்கள். இந்த ஆண்டு தொடக்கம் சிறப்பாக உள்ளது. குருபகவான் ஏழாம் இடத்திலிருந்து செல்வாக்கையும் சுகத்தையும் அள்ளித் தருவார்.

குடும்பத்தில் மகிழ்ச்சி உருவாக்குவார். மேலும் நிழல் கிரகமான ராகு மூன்றாம் இடத்திலிருந்து பல்வேறு நற்பலன்களை செய்துகொண்டிருக்கிறார். அவரால் காரியத்தில் வெற்றி காணலாம்.

தற்போது நன்மை செய்துகொண்டிருக்கும் குரு பகவான் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஏழாம் இடத்திலிருந்து எட்டாம் இடத்திற்குச் செல்கிறார். இது சிறப்பான இடமல்ல. இதனால், அவரால் நன்மைதரமுடியாது பொருளாதார சரிவை ஏற்படுத்தலாம்.

வீண் விரோதத்தை உருவாக்கலாம். குரு சாதகமாக இல்லை என்றாலும், அவரது ஏழாம் இடத்துப் பார்வை சாதகமாக இருப்பதால் எந்த இடையூற்றையும் முறியடிக்கும் வல்லமை கிடைக்கப்பெறுவர். மேலும், தற்போது மூன்றாம் இடத்திலிருக்கும் ராகு பல்வேறு நன்மைகளைச் செய்துகொண்டிருக்கின்றார்.

பொருளாதார வளத்தை அதிகரிக்கச் செய்வார். அவர் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி இரண்டாம் இடமான மீனத்திற்கு வருகிறார். இது சிறப்பான நிலையல்ல. குடும்பத்தில் சிற்சில பிரச்சினை தருவார். ராகு இடமாறும்போது கேது ஒன்பதாம் இடத்திலிருந்து எட்டாம் இடத்திற்குச் செல்கிறார். அதுவும் சிறப்பான இடமல்ல.

மேற்கண்ட நிலையிலிருந்து பார்க்கும்போது ஆண்டின் தொடக்கத்தில் குரு, ராகு பலமான இடத்திலிருந்து நன்மைகளை தருவார். பிற்பகுதியில் குருவின் பார்வையால் சீரான பலனை கண்டு வாழலாம். இனி காலவாரியான பலனைப் பார்ப்போம்.

**ஏப்ரல் 13 முதல் ஓகஸ்ட் 15 வரை**

சிறப்பான காலம் பொருளாதார வளம் அதிகரிக்கும் தேவைகள் பூர்த்தியாகும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்துமுடிக்கலாம். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் - மனைவியிடையே அன்பு அதிகரிக்கும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். சிலர் குழந்தைப் பாக்கியங்கள் பெறுவர். வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருட்கள் வாங்கலாம். சனியால் குடும்பத்தில் சிற்சில சலசலப்புக்கள் வந்தாலும் குரு பலமாக இருப்பதால் அதனால் பாதிப்பு வராது. வீடு, நிலம் போன்றவை வாங்கலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் குதூகலமான பலன்களை காணலாம்.

பதவி உயர்வு, சம்பள உயர்வுக்குத் தடைஏதும் இருக்காது. வேலையின்றி இருப்பவருக்கு வேலை கிடைக்க வாய்ப்புண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் ஆலோசனையும் கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார். வியாபாரிகள் வளர்ச்சி தொடரும்.

எதிரிகளால் வரும் தடைகள் அனைத்தும் அடியோடு மறையும். பகைவர்கள் உங்களிடம் சரணடைவர். புதிய வியாபாரம் தொடங்கலாம். வீண் செலவுகள் இருக்காது. கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். கலைஞர்கள் நற்பெயரும் நற்புகழும் கிடைக்கப்பெறுவர்.

புதிய ஒப்பந்தங்கள் தாராளமாகக் கிடைக்கும். புகழ் பாராட்டு கிடைக்கும். சிலர் அரசிடமிருந்து விருது பெறலாம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். பெண்கள் வாழ்க்கையில் எல்லையில்லா மகிழ்ச்சி காண்பர். புத்தாடை அணிகலன்கள், ஆடம்பரப் பொருட்கள் வாங்குவீர்கள். பிறந்த வீட்டிலிருந்து சீதனங்கள் அதிகமாக வரும். உடல் நலம் சிறப்பாக இருக்கும். மருத்துவச் செலவு குறையும்.

**ஓகஸ்ட் 16 முதல் மார்ச் வரை**

காரிய அனுகூலம் ஏற்படும். உங்கள் முயற்சியில் வரும் தடைகளை குருவின் ஏழாம் இடத்துப் பார்வையால் முறியடிப்பீர்கள். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். அதேநேரம் அதிக செலவுகள் உருவாகும். எனவே பண விடயத்தில் சற்று அக்கறை காட்டவும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நீடிக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் தீவிர முயற்சியின் பேரில் நடக்கும். பெப்ரவரிக்குப் பிறகு தம்பதியினரிடையே மனக் கசப்பு வரலாம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போகவும். உத்தியோகம் பார்ப்பவர்கள் முன்பு போல அதிக பலனை எதிர்பார்க்க முடியாது. அதற்காக பிற்போக்கான சூழ்நிலைக்குத் தள்ளப்பட மாட்டீர்கள்.

மேலதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். வேலை நிமித்தமாக சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்துசெல்ல நேரிடலாம். வியாபாரிகள் அதிகமாக உழைக்கவேண்டி இருக்கும். குறிப்பாக பெப்ரவரிக்குப் பிறகு பண விடயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



வாழ்க்கையில் நெளிவு சுளிவு தெரிந்த மீனராசி அன்பர்களே! எந்த பிரச்சினையிலும் சிக்காமல் பாதுகாப்பான வாழ்க்கை மேற்கொள்வீர்கள். கடந்த ஆண்டில் கிரகங்களின் சாதகமற்ற நிலையால் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்திருக்கலாம்.

சனி பகவான் 4 ஆம் இடத்தில் இருப்பதால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளை சந்திக்கலாம். இன்னொரு முக்கிய கிரகமான குரு 6 ஆம் இடத்தில் இருப்பதால் மனதில் வெறுப்புணர்ச்சியே அதிகம் இருந்திருக்கும். நிழல் கிரகமான ராகு 2 ஆம் இடத்தில் இருந்து பொருள் இழப்பை கொடுப்பார்.

கேது 8 ஆம் இடத்தில் இருப்பதால் உடல் உபாதைகள் வரலாம். இப்படிப்பட்ட பிற்போக்கான பலன்கள் உங்களை அதிகமாகவே அலைக்கழித்திருக்கும். இந்த பின்னடைவில் இருந்து இந்த ஆண்டு விடுபடுவீர்கள். ஆண்டின் தொடக்கத்தில் சிற்சில இடர்பாடுகளை சந்தித்தாலும், படிப்படியாக முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள்.

சனி பகவானை பொறுத்தவரை அவர் இந்த ஆண்டு முழுவதும் 4 ஆம் இடத்திலேயே நிலை கொண்டிருப்பார். ஆனால் குரு பகவான் அகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி இடம்மாறி 7 ஆம் இடத்திற்கு வந்து பல்வேறு நன்மைகளை தர உள்ளார். உங்கள் செல்வாக்கையும். காரிய அனுகூலத்தையும், பொருளாதார வளத்தையும் அவர்தருவார்.

மேலும் அப்போது குருவின் 7 ஆம் இடத்து பார்வையும் சாதகமாக அமையும். ராகு, கேது பெயர்ச்சி 5-2-2005 அன்று நிகழ்கிறது. அப்போது ராகு உங்கள் ராசிக்கு வருகிறார். அதன்பின் அவர் சோர்வையும் உறவினர்கள் வகையில் மனக்கசப்பையும் தரலாம். அதேநேரம் கேது 7 ஆம் இடத்திற்கும் வருகிறார்.

இதுவும் சிறப்பான இடம் அல்ல. அவரும் குடும்பத்தில் சிற்சில குழப்பத்தை உருவாக்கலாம். அதற்காக கவலை கொள்ளவேண்டாம். குருவின் பலனால் முன்னேற்றம் காணலாம். மேலும் விரைவாக சுழலும். சூரியன், புதன், செவ்வாய், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நன்மை தருவர். மேற்கண்ட நிலையில் இருந்து பார்த்தால் ஆண்டின் பிற்பகுதி மிகவும் சிறப்பாக இருக்கும்.

**ஏப்ரல் 13 முதல் ஓகஸ்ட் 15 வரை**

முக்கிய கிரகங்கள் சாதகமற்ற இடத்தில் இருந்தாலும் சனியின் 3 ஆம் இடத்துப்பார்வையும் குருவின் 9 ஆம் இடத்துப்பார்வையும் சிறப்பாக இருக்கிறது. அதன்மூலம் காரிய அனுகூலத்தை கண்டு பணப்புழக்கதையும் பெறலாம். எதிரிகளை எதிர்கொள்ளும் ஆற்றல்வரும்.

உங்கள் செல்வாக்குக்கு எந்தப் பங்கமும் வராது. குடும்பத்தில் சுமூக நிலை நீடிக்கும். தேவையான வசதி கிடைக்கும். கணவன் - மனைவி இடையே சிற்சில கருத்து வேறுபாடுகள் வரலாம். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து போகவும்.

உத்தியோகம் பார்ப்பவர்கள் தற்போது சீரான நிலையில் இருக்கிறீர்கள். அதிக பளுவை சுமக்க வேண்டியதிருக்கும், அலைச்சல் இருக்கும். கோரிக்கைகள் நிறைவேறாமல் போகலாம். சிலர் வேலை நிமித்தமாக தற்காலிகமாக குடும்பத்தைவிட்டு பிரிய நேரிடலாம்.

மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். வியாபாரிகள் சீரான நிலையில் இருப்பர். அதிகமாக உழைக்க வேண்டியதிருக்கும். ஆனாலும் போதிய வருமானத்தை காணலாம். எதிலும் அதிக முதலீடுசெய்ய வேண்டாம். கலைஞர்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைவீர்கள்.

சிரத்தை எடுத்தால்தான் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். எதிர்பார்த்த புகழ், பாராட்டு போன்றவை கிடைக்காமல் போகலாம். மாணவர்கள் தற்போது முயற்சிக்கு ஏற்ற பலனையே கண்டு கொண்டிருப்பீர்கள். பெண்கள் திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் விட்டுக்கொடுத்துப் போகவும், வழக்கு விவகாரங்கள் சுமாராகவே இருக்கும். உடல் நலனில் சற்று அக்கறை காட்ட வேண்டியதிருக்கும். உஷ்ணம், பித்தம், சளி, இருமல் போன்ற உபாதைகள் வரலாம்.

**ஓகஸ்ட் 16 முதல் மார்ச் வரை**

பொன்னான காலம். இடர்பாடுகள் அனைத்தும் இருக்கும். இடம்தெரியாமல் போகும். வாழ்க்கையின் வசந்தத்தை நோக்கி நடைபோடலாம். பொருளாதார வளம் மேம்படும். தேவைகள் பூர்த்தி ஆகும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உங்கள் செல்வாக்கு உயரும். சொத்து, வீடு, மனைவாங்க யோகம் உண்டு.

குடும்பம் சிறப்படையும், குதூகலம் ஏற்படும். தம்பதியினர் மனம் ஒத்து வாழ்வர். சுப நிகழ்ச்சிகள் நடக்கும். தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். சிலர் வசதியான வீட்டுக்கு குடிபுகுவர். வாகன சுகம் கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் உயர்ந்த நிலையை அடைவர்.

வேலையில் தன்னம்பிக்கை பிறக்கும். உங்கள் எண்ணம் ஈடேறும். உயர் அதிகாரிகள் ஆதரவுடன் இருப்பர். பதவி உயர்வு சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். விரும்பிய இடத்திற்கு மாற்றம் பெறலாம். கோரிக்கைகள் நிறைவேறும்.

சிலர் அதிகார அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவர். வேலையின்றி இருப்பவர்களுக்கு தொழில் கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாபாரம் சிறப்படையும். லாபம் அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கலாம். அதில் நல்ல முன்னேற்றம் இருக்கும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் கிடைக்க பெறுவர்.

அரசிடமிருந்து விருது, பாராட்டு போன்றவை கிடைக்க பெறலாம். பொதுநல சேவகர்கள் அரசியல்வாதிகள் ஆண்டின் பிற்பகுதியில் நன்மதிப்போடும், புகழோடும் இருப்பர். சிலருக்கு புதிய பதவி கிடைக்கும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பர். விரும்பிய பாடங்கள் கிடைக்கும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**
*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்.*
திருக்குறள்

# நமது நோக்கு

## தோற்கடிக்கப்பட்ட பிரதேசவாதம்...

பிரதேச வாதத்தை ஊக்குவித்து அதன் மூலம் தமிழினத்தின ஒருமைப்பாட்டுணர்வை சிதைத்து தமிழ்த் தேசியத்தின் வலுவை பலவீனப்படுத்துவதுடன் அடிப்படையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிக்க பேரினவாத சக்திகள் மேற்கொண்ட சதித்திட்டம் அதன் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டுள்ளது.

காலங்காலமாக ஈழத்தமிழரின் வாழ்வுரிமை மற்றும் அரசியல் உரிமைகளை நிராகரித்து அவர்களின் சுதந்திர இருப்புக்கும், இயல்புவாழ்வுக்கும் அச்சுறுத்தலாக இலங்கையின் இனவாத அரசுகள் மேற்கொண்டு வந்த பன்முகப்பரிமானம் கொண்ட சமூக, அரசியல், கல்வி மற்றும் பொருளாதார ரீதியிலான நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகள் யாவும் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் ஏற்படுத்திய தாக்கங்களின் எதிரொலிகள் சமகால தமிழினத்தின் இருப்பை முற்றாகக் கேள்விக்குறியாக்கும் இழப்புக்களை எந்த அளவில் ஏற்படுத்தி வந்துள்ளன என்பது விபரிக்கவேண்டிய ஒன்றல்ல.

தமிழ் மக்கள் தம் பாரம்பரிய வேர்மூலங்களை எல்லாம் அறுத்தெறிந்து கொண்டு புலம் பெயர்ந்தும், இடம்பெயர்ந்தும் இழப்புக்களின் துயர் சுமந்தவர்களாக திசையெங்கும் பரந்து தம்மை நிலைப்படுத்திக்கொள்ளவேண்டியேற்பட்ட அவலம் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் அவர்கள் தம் வாழ்வுரிமைகள் பற்றி பேசிய பேச்சுக்கு கொடுத்த அநாகரிகமான பரிசுகளேயாகும்.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழ் மக்களை இலங்கைத் தமிழர், இஸ்லாமியத் தமிழர், இந்தியத் தமிழர் என வகைப்படுத்துவதன்மூலம் அவர்களிடையே தாம் தமிழர், ஒரே இனத்தவர்கள் என்ற உணர்வெழுச்சியை அழிக்க சிங்கள பௌத்த அரசுகள் மேற்கொண்ட அரசியல் மற்றும் யாப்புரீதியிலான சதி நடவடிக்கைகள் அவர்களுக்கு எதிர்பார்த்த வெற்றியை ஏற்படுத்த சிறுபான்மையின் மிதவாதத் தலைமைகள் சிலவும் பதவிக்கு ஆசைப்பட்டு குறுகிய சிந்தனையுடன் இணைந்து செயற்பட்டது தான் துயரம் தரும் விடயமாகும்.

அந்நியர்கள் இலங்கையை ஆண்டபோது அவர்கள் எவ்வாறெல்லாம் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு அதன்மூலம் இந்த மண்ணில் தேசிய இனத்தனித்துவக் கோட்பாட்டை உடைத்து இனமுரண்பாடுகளைத் தோற்றுவித்து தமக்கான அரசியல் அநுகூலங்களை அடையமுயன்றார்களோ அதே வழியையே சிங்கள அரசுகளும் கையாள முயன்றபோது அவர்கள் தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டுணர்வை சிதைப்பதையே தமது இலக்காகக் கொண்டனர்.

மதரீதியாக, சாதிரீதியாக, பிரதேசரீதியாக தமிழினத்தை கூறுபோடுவதன் மூலம் அவர்களின் தேசிய இனதனித்துவ ஒருமைப்பாட்டை தகர்த்து அவர்களை வலிமையற்றவர்களாகவும், உரிமைகளுக்காக ஒன்றிணைந்து போராடும் திறனற்றவர்களாகவும், அர்ப்பத்தனமானதும் அனாவசியமானதுமான பிரச்சினைகளுக்கெல்லாம் தமக்குள் முட்டிமோதி தம்மைத்தாமே சீரழித்துக் கொள்பவர்களாகவும் மாற்ற இலங்கை சுதந்திர மடைவதற்கு முன்பிருந்தே சிங்கள இனவாத சக்திகள் மேற் கொண்ட தொலைநோக்கு திட்டத்துடனான முயற்சிகளை அப்போதைய மிதவாதத் தமிழ் தலைமைகள் அலட்சியப்படுத்தியதன் விளைவையே பின்னர் தமிழ் மக்கள் கவலையுடனும், கண்ணீருடனும் பல தசாப்தங்களுக்கு அறுவடை செய்யவேண்டியதாயிற்று.

தமிழ் மக்களின் தலைமைத்துவம் மிதவாதிகளிடமிருந்து போராளிகளின் கைக்குள் வந்ததும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகவும், தாயக மண் மீதான தன்னாட்சி அதிகாரத்தை மீட்டெடுக்கவும், ஆயுத போராட்டத்தை முன்னெடுக்க ஆரம்பித்ததும் வரலாறு மாற ஆரம்பித்தது. கிட்டத்தட்ட இரண்டரை தசாப்த காலப் போரின் பின்னர் ஏற்பட்ட வரலாற்று வெற்றியால் உருவான மாற்றம் சர்வதேச சமூகத்தை தமிழர்கள் பார்வை திருப்பவைத்தது. இது சிங்கள அரசுகள் எதிர்பார்க்காத ஒன்றாகும்.

இந்த நிலையில், தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டுணர்வை தமிழ்த் தேசியத்தின் எழுச்சியை சிதைக்க சிங்கள அரசும் அவர்களின் ஆதரவுச்சக்திகளான தமிழின விரோதிகளும், சில வல்லாதிக்க வெறிகொண்ட புற சக்திகளும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. இதன் மிகக் கடைசி முயற்சிக்கு - அதாவது கிழக்கில் கருணாவை பயன்படுத்தி பிரதேச வாதத்தை மூசி எரியவிட இவர்கள் அனைவரும் எடுத்த பகீரத முயற்சிக்கு கிடைத்த படுதோல்வி தேர்தலின்போது இனவாதிகளுக்கு கிடைத்த பலமான அடிக்கு பின்னர் உடனடியாக கிழக்கு மக்கள் கொடுத்த மரண அடியாக அமைந்துவிட்டது.

கிழக்கில் கருணாவுக்கு முடிசூட்ட முயன்ற சிங்கள ஆட்சியாளரும், படைத்தரப்பும் மக்கள் கொடுத்த முடிவால் இடிந்து போயுள்ளனர். பிரதேச வாதம் கிழக்கில் சில கிறுக்கர் களுக்கு தேவையானதாக இருக்கலாம். ஆனால் மக்கள் அதற்கு அங்கீகாரம் அளிக்கத் தயாராக இல்லை என்பதையே கருணாவின் பரிதாபகரமான வீழ்ச்சி காட்டுகிறது.

வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி தமிழ் மக்கள் தங்களின் தமிழ்த் தேசியம், ஏக தலைமைத்துவம் குறித்த உறுதியான நிலைப்பாட்டை பிரதேசவாதத்தை தோற்கடித்து மீண்டும் நிரூபித்துள்ளார்கள்.

# நாடும் நடப்பும்




# புனர்வாழ்வு அமைச்சை நியமிக்காதது கவலைக்குரிய விடயமாகும்

### ஜனாதிபதிக்கு ஜயலத் ஜயவர்த்தன கடிதம்

புதிய அரசு- புனரமைப்பு மீள்குடியமர்த்துகை அகதிகள் விவகார அமைச்சை ஏற்படுத்தாதது கவலைக்குரிய விடயமாகும் என பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

யுத்தத்தால் அநாதைகளாக்கப்பட்டு அகதிகளாக எமது நாட்டிலும், வெளிநாட்டிலும் வசிக்கும் அகதிகள், அநாதைக் குழந்தைகள், இளைஞர், யுவதிகள், அங்கவீனர்கள், விதவைகள் போன்றோரில் கவனம் செலுத்துதல், வடக்குப் பகுதியைப் புனரமைப்புச் செய்தல், அகதிகளை மீளக்குடியமர்த்தவதற்காக வடக்கே பாதிக்கப்பட்ட இடங்களைத் திருத்தியமைத்தல், அடிப்படை மனித தேவைகளைப் பூர்த்திசெய்தல், சமாதான நடைமுறைகளை சிறந்தமுறையில் முன்னெடுப்பதற்குப் பல்வேறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் உட்படப் பல பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு இந்த அமைச்சுக்கு உரியதாகும்.

எமது நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தத்திற்குத் தீர்வு ஐக்கிய இலங்கைக்குள் பெற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் முடிவிலேயே தங்கியுள்ளது. எனவே, அதற்கு அத்திவாரம் இடுவதற்கும், சூழலை மாற்றியமைப்பதற்கும் - புனரமைப்பு மீள்குடியமர்த்துகை அகதிகள் விவகார அமைச்சு கடந்த இரண்டுவருட காலத்தில் கூடியளவிலான பங்களிப்பை வழங்கியுள்ளது.

எனவே, தங்களது அமைச்சரவையில் எனது அமைச்சின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட பணிகளை முன்னெடுப்பதற்கும், அதற்கான பொறுப்புக்களை வகிப்பதற்கு அமைச்சர் ஒருவரை நியமிக்காது, அந்த அமைச்சை ஏற்படுத்தாது இருப்பது மிகவும் கவலைக்குரியதும், துரதிர்ஷ்டமானதுமான செயல் என்று நான் கருதுகிறேன்.

எமது நாட்டில் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கைகளுக்கு நேரடியாகத் தொடர்புபட்ட ஓர் அமைச்சை இன்னும் ஏற்படுத்தாது இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என மேலும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 22 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத்தில் உறுதியற்ற நிலைமையே தோன்றும்

### அவதானிகள் கருத்துத் தெரிவிப்பு

இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றம் எதிர்வரும் 22 ஆம் திகதி கூடும்போது, நாடாளுமன்றத்தில் உறுதியற்ற ஒரு நிலைமை ஏற்படப்போவதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடாளுமன்றச் சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியினரும் தனித்தனியே ஒவ்வொரு வேட்பாளரை நிறுத்தவுள்ளனர்.

இவர்களுள் ஐக்கிய தேசிய முன்னணி சார்பாக சபாநாயகர் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ள லொக்கு பண்டாரவுக்கு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவருக்கு ஆதரவாக 110 வாக்குகள் அளிக்கப்படும் என்று கணிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் அடுத்த பெரிய சக்தியான ஜாதிக ஹெல உறுமய சபாநாயகர் தெரிவு வாக்களிப்பில் கலந்து கொள்ளாது என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் சபாநாயகராகப் போட்டியிடுபவருக்கு 106 வாக்குகளே கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், ஆளும் கட்சி ஒன்றாக இருக்க, எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஒருவர் நாடாளுமன்றச் சபாநாயகராக இருக்கும்நிலை தோன்றும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இது ஆளும் தரப்பைக் கடுமையான நெருக்கடிக்குள்ளாக்குவதுடன், நாடாளுமன்றச் செயற்பாடுகளையும் பலவீனமடையச் செய்யும் என்றும் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இதேபோன்றதொருநிலை, 1960 ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் நிலவியதையும் சுட்டிக்காட்டியுள்ள இவர்கள், அப்போது எதிர்க்கட்சியாகவிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரே நாடாளுமன்ற சபாநாயகராக இருந்ததையும் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் பின்னர், சில மாதங்களுக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடாத்தப்பட்டபோது, சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமோக வெற்றியீட்டி தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் ஆட்சிபீடத்திலிருந்தது என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஒருமாதத்துக்கு மேல் அமைச்சரவை கூடவில்லை

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அமைச்சரவை சுமார் கடந்த ஒருமாத காலத்திற்கும் மேலாக கூடாமல் இருந்து வருகிறது.

அமைச்சரவை இறுதியாக மார்ச் மாதம் 24 ஆம் திகதி கூடியது. இவ்வாறு அமைச்சரவை நீண்டகாலம் கூடாமல் இருப்பது இலங்கை வரலாற்றில் இதுவே முதற்தடவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலுக்காக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபோது, அமைச்சர்கள் தமது பதவிகளை இழந்ததால் அமைச்சுப் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ள அதேசமயம், புதிய அமைச்சர்கள் இன்னமும் பதவியேற்று வர்த்தமானி வெளியிடப்படாதநிலை நீடித்து வருகின்றது.

இந்நிலையில், அமைச்சுக்களின் செயலாளர்களும் தமது பணிகளை உத்தியோகபூர்வமாக முன்னெடுக்கமுடியாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு தொகுதி அமைச்சர்கள் தமது பதவிகளை ஏற்றுள்ளநிலையில், ஜே.வி.பியைச் சேர்ந்த அமைச்சர்கள் இன்னமும் பதவியேற்காத காரணத்தால், புதிய அமைச்சரவை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்னமும் வெளியிடப்படவில்லை.

இதனால், அமைச்சர்கள் இன்னமும் சட்டரீதியாக அந்தப் பதவிக்குரியவர்கள் ஆகவில்லையெனவும், இதுவரை அமைச்சர்கள் நியமிக்கப்படாத அமைச்சுக்களின் செயலாளர்களும் இதனால் சட்டரீதியாகச் செயற்பட முடியாதவர்களாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், அமைச்சுக்களின் செயலாளர்கள் முக்கிய முடிவுகள் எதனையும் எடுக்கமுடியாத நிலையிலிருப்பதாகவும், இது முழுநாட்டினதும் நிர்வாக சேவையையும் சட்டரீதியாக ஸ்தம்பித நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தியாகத்தாய் - அன்னை பூபதி நினைவாக... காவலூர் விஜேந்திரன்

# தமிழர்தம் நீண்ட வரலாற்றில் நீங்காது நிலைத்திருக்கும் அன்னை

**இளைஞர், யுவதிகளை கடத்தல், படு கொலைகள், சித்திரவதைகள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள் என காரண மின்றி ஆக்கிரமிப்பின் அகோரம் தென் தமிழீழத்தை வாட்டி வதைத்துக்கொண்டிந்தது. இந்திய, சிறிலங்கா இராணுவத்தி னர் கூலிப்படைகளாக செயற்பட்ட தேசவிரோத குழுக்கள், அன்னிய சக்திகள் இவற்றுக்கு எதிராக அன்னை பூபதி தனி ஒருவராக நின்று புனிதப் போர் தொடுத்தார்.**

ஒரு சாதாரண தாயின் அசாதாரண துணிவாகவும், அலாதியான தேசியப் பற்றுணர்வாகவும் அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது. தர்மத்தின் குருவாக அவர் தனித்து நின்று ஒரு சாம்ராஜ்சியத்தின் அதர்மத்தை எதிர்த்தார். நீதியின் நெருப்பில் தன்னை எரித்து, அநீதிக்கு சவால் விடுத்தார். சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள் எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றவர்கள். அவர்களே சரித்திரத்தையும் படைக்கிறார்கள்.

அன்னையும் ஒரு சரித்திரத்தை படைத்தார். ஒரு தனித்துவமான காலத்தால், சாகாத சரித்திரத்தைப் படைத்தார். அன்னை பூபதியின் தாயக உணர்வையும் தமிழ் இனத்தின் மீதும், விடுதலையின் மீதும் கொண்ட தாராள பற்றுணர்வையும் நிலைநிறுத்தி, உண்ணா நோன்பிருந்து, தியாகச்சுடரானபின் தமிழீழம் முதல் தாய் குறித்து தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மேற்சொன்ன வசனங்களைக் கூறியுள்ளார்.

இந்திய அரசின் இரண்டாவது முகத்தையும், அதாவது நிஜமுகத்தையும் தமிழர்களும் உலகமும் புரிந்துகொள்வதற்கு பூபதி அம்மாவின் புனித அகிம்சைப்போர் காரணமாகிறது. தமிழீழப் பாரம்பரியம் என்றும் நினைவில் வைத்திருக்கும் சொல். தாயக விடிவிற்காய் தன் உயிர்துறந்த பூபதி அம்மாவின் பெயரேயாகும். வீரத் தாய்க்குலத்தை என்றென்றும் நினைவில் வைக்கும் நாமம் அகிம்சைத் தாய் அன்னை பூபதி என்பதேயாகும்.

இற்றைக்கு 16 ஆண்டுகளுக்கு முன் இந்தியப் படைகள் ஈழ மண்ணில் செய்த அட்டூழியத்திற்கு எதிராக, இந்திய அரசிடம் நியாயம் கோரி உண்ணாநோன்பிருந்தார் அன்னை பூபதி. ஆக்கிரமிப்பாளர்களின் கோரப்பிடிக்குள் தென்தமிழீழம் சிக்குண்டு தவித்தது. கோயில், பாடசாலைகள், வயல்வெளிகள், பொது இடங்கள், குடிமனைகளென எவையும் மிஞ்சவில்லை. இவையாவும் தமிழர்களின் உடமை என்ற ஒரே காரணத்திற்காகவே அழிக்கப்பட்டன.

இளைஞர், யுவதிகளை கடத்தல், படுகொலைகள், சித்திரவதைகள், சுற்றி வளைப்புக்கள், கைதுகள் என காரணமின்றி ஆக்கிரமிப்பின் அகோரம் தென் தமிழீழத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. இந்திய, சிறிலங்கா இராணுவத்தினர் கூலிப்படைகளாக செயற்பட்டதேசவிரோத குழுக்கள், அன்னிய சக்திகள் இவற்றுக்கு எதிராக அன்னை பூபதி தனி மனிதனாக நின்று புனிதப்போர் தொடுத்தார்.

வெறிபிடித்துத்திரிந்த வெறியர்களின் வெறியை அடக்க மட்டக்களப்பு அன்னையர் முன்னணி பலவகையான போராட்டங்களை நடாத்தியது. எவையும் தமிழர்களுக்குச் சாதகமாக அமையவில்லை. முன்னணியின் போராட்டங்களின் இறுதி வடிவமாகவே அன்னையின் தியாக வேள்வி அமைந்தது. 1932 ஆம் ஆணடு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி சூரியன் கண்ணமுத்து - பெரியபிள்ளை தம்பதியினரிற்கு இரண்டாவது மகளாகப் பிறந்தவர் தான் அன்னை பூபதி. மருதமும் நெய்தலும் சார்ந்த மட்டக்களப்பின் இரான் கிராமத்தில் தனது நான்கு சகோதரர்களுடன் இளமைக்கால இனிமைகளை சுமந்தவளாக அன்னை பூபதி வாழ்ந்தார். முத்துலிங்கம் என்ற விவசாயியை கரம் பற்றிய அன்னை, சிறிது காலத்திலேயே தனது கணவரை இழந்தார். தனது இரு மகன்களுடன் சிறிது காலம் தனித்திருந்தார். ஊர்ப் பெரியவர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்ப இளம் விதவையாக இருக்காது, கணபதிப்பிள்ளை என்பவரை மறுமணம் செய்தார். பொதுப்பணிகளில் தன்னை இணைத்து கணவரது ஒத்துழைப்புடன் செயற்பட்டு வந்தார் பூபதி அம்மா.

விடுதலைப்புலிகள் மூன்றாம் கட்ட ஈழப் போரில் ஈடுபட்டு ஒரு வருடமும், ஒன்பது மாதமும் கடந்துவிட்ட நிலையில் ஆக்கிரமிப்பாளர்களின் அராஜகப் படுகொலைகள், சித்திரவதைகள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள் என வயது, பால் வேறுபாடின்றி தொடர்ந்தன. இவை அன்னையின் மனதை வெகுவாகப் பாதித்தது. இந்நிலையில் பூபதி அம்மாவின் 28 வயதான மகன் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதிலிருந்து மீள்வதற்கு முன் அன்னையின் 23 வயதான இன்னோர் மகன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, இராணுவ முகாமில் அடைத்துவைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்.

தமக்கும் தனது இனத்திற்கும் இனிவரும் காலங்களிலும் இவ்வாறான அநியாயங்கள் இடம்பெற அனுமதிக்கமுடியாது என மட்டக்களப்பு அன்னையர் முன்னணி போராட்டம் நடத்த எண்ணியது. இந்தப் போராட்டத்தைத் தியாக தீபத்தின் வழியில் மேற்கொள்ள முடிவுசெய்தனர். அன்னை பூபதி இந்தப் புனித போராட்டத்



தைத் தான் மேற்கொள்வதாக முன்வந்தார்.

56 வயதான அன்னைபூபதி இந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு எதிராக இரு கோரிக்கைகளை முன்வைத்து, 1988-03-19 அன்று 10.45 மணிக்குத் தனது புனித அகிம்சைப் போரை ஆரம்பித்தார். மாணிக்கவாசகர் சுவாமிகளிற்கு இறைவனே குருவாக வந்து ஞானோபதேச தீட்சை கொடுத்தது, திருப்பெருந்துறையிலுள்ள ஒரு குருந்தைமரத்தடியில். அவ்வாறான இதிகாச சிறப்புப்பெற்ற குருந்தை மரம் அன்னையின் போராட்டத்திலும் பங்கு கொள்கிறது.

இதிகாச புகழ்பூத்த அமிர்தகழி சிறி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் உள்ள குருந்தை மரத்தின் கீழேயே அன்னையின் போராட்டத்திற்கான மேடையும் அமைக்கப்பட்டது. இன்றைக்கு 16 ஆண்டுகளிற்கு முன் "அமைதிகாக்க வந்த இந்தியப்படை, அதற்கு மாறாக தமிழீழத்தில் செய்துவரும் மனித வேட்டைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்." நாட்டில் சாந்தி சமாதானம் ஏற்பட்டு சுமூகநிலை தோன்ற தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துத் தீர்வு காணவேண்டும்.

இவ்வாறு இரு கோரிக்கைகளை முன்வைத்து, முழுமுதல் கடவுளாம் கணபதியின் முன் சர்வமத வழிபாடுகளுடன் திரண்டு நின்ற மக்கள் வெள்ளத்தின் மத்தியில் அன்னையர்களின் இறுமாப்பான புன்முறுகலுக்குக் கையசைத்து அகிம்சைப்போரை ஆரம்பித்தார். "நான் பெரிது நீ பெரிது என்று வாழாது நாடு பெரிதென்று வாழ்வோம்" என்ற தேசியத்தலைவரின சிந்தனை வரிகளிற்கு செயல்வடிவம் கொடுப்பவர்களாக, தாய்நாட்டிற்காக தென் தமிழீழத்தில் வரலாற்றுச் சிறப்பான புனிதப்போரை தொடர்ந்தார். மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் பெரியோர்கள் என அன்னைக்கு ஆதரவு வழங்கி தம்மாலான பல செயற்பாடு களை மேற்கொண்டனர். இதில் ஆவேசமான கோசங்களைத் தாங்கிய பதாதைகளுடன் மாணவர்கள் தொடர்ச்சியாகப் பங்களிப்பு வழங்கினர். அன்னையுடன் அன்னையர் முன்னணி அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற்கொண்டது. இந்திய இராணுவம் எவ்வளவோ முயற்சித்தும் அன்னையின் தியாக வேள்வி கைவிடப்படவில்லை.

தனது முடிவில் உறுதியாக இருந்த அன்னை, வைத்தியர்களின் ஆலோசனையையும் ஏற்கமறுத்து அகிம்சைப் போரை உவகையுடன் மேற்கொண்டார். தாயகவிடிவிற்காக தாய் ஒருத்தி தன்னையே தீபமாக்கி ஒளி கொடுக்கின்றாள். ஆக்கிரமிப்பாளர்களின் அடாவடித்தனங்களிற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தனது இலட்சியப்போரில் வெற்றி காண்கின்றார்.

தாயக விடுதலைப் போரில் சாதனை படைத்து, உயிர்துறந்தவர்களுடன் 19.04.1988 இல் தன்னையும் இணைத்துக்கொண்டார். தனது இலட்சியத்தில் சிறிதளவு தளர்வுமின்றி போராடிய அன்னை, தமிழீழ வரலாற்றில் தனக்கெனத் தனியான இடத்தை வகுத்துக் கொண்டார். இந்தியப்படையினரதும் அவர்களது அடிவருடிகளினதும் அராஜகத்தைப் பேரினவாத அரசுகள் மட்டுமன்றி உலகறியச் செய்த அன்னை பூபதி என்ற வீரத்தாய்க்கு தமிழ் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர். எழுச்சி கொண்ட மக்களாக அன்னையின் இறுதி நிகழ்வுகளில் பெருமளவில் மக்கள் கூட்டம் கலந்து கொண்டது. மட்டக்களப்பு நாவலடி கடலோர மைதானத்தில் அகிம்சைத் தாயின் புனித உடல் விதைக்கப்பட்டது.

தேசியத்தலைவர் பூபதி அம்மா பற்றி இவ்வாறு கூறுகிறார். "அன்னை பூபதி ஒரு தனிமனிதப் பிறவியாகச் சாகவில்லை." தமிழ்த் தாய்க் குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது என பூபதிக்கு புகழாரம் சூட்டுகிறார்.

தாயக விடுதலைப் போரில் தம் உயிர் துறந்தவர்களில் அன்னையும் ஒருவர். சத்திய வேள்வியில் சரித்திரம் படைத்த அன்னை என்றைக்கும் போற்றுதற்குரிய தியாக தீபமாக ஒளிரவே செய்வார்.


## பாலைவனம் ஆடை நெய்கிறது



ஒரு
விருட்சத்தின்
வெளிச்சத்தில்
ஒரு
பாலைவனம்
ஆடை
நெய்கின்றது.
விருட்சம்
விழுதுகளோடு
வளர்வதால்
பாலைவனம்
முகத்தை
முகம் பார்க்காமல்
சாக்கடைக்குள்
சதிராடுகின்றது.
குடுவைத் தேனுக்குள்
குதூகலிக்கும்
தேனீ நதிகள்
இடையர்
தேடிய இருட்டுக்குள்
பாலையும் தேனையும்
பகலவன் வருகைக்காக
காலையும் மாலையும்
தேடுகின்றன.
பூபதி நதியின்
விருட்ச நிழல்
வாழும் காலத்தில்
அந்த
பாலைவனம்
முதுகு காட்டியிருந்தால்
பாடும் மீன்களின்
பசிக்கு பாலைவனம்
உணவாகியிருக்கும்.
இன்னும்
நாட்கள்
இங்கே
இறக்கவில்லை.
சகுனிகளும்
விபீடணர்களும்
எட்டப்பர்களும்
காக்கை வன்னியர்களும்
எடுத்த
பிறப்பின் வடிவங்களால்
சேர, சோழ, பாண்டியன்
அரச பீடங்கள்
விருட்சங்களை இழந்தன.
ஆனால்
சோழன் கொடி
இன்னும்
சுடராக ஏறுகின்றது
எனினும் இன்று
கிழக்கில் ஒரு கழுகு
வல்லைக் காற்றின்
வாசலை அமைக்க
தொப்பிக் காட்டுக்குள்
தோப்புக் கரணம்
போடுகின்றது.
அன்னை
பூபதியின் தியாகம்
கிழக்கிலும் வடக்கிலும்
தாயகத்தின் கோடுகளை
வரையும் நேரம்
பாலைவனத்தின் ஆடை
எரியும், அழியும், தொலையும்
மனிதம் மகத்துவம்
கிழக்கிலும் வடக்கிலும்
விளையும் விளையும்.

- பூபதி புலேந்திரராஜா

## பூபதியே அம்மா நின் பாதம் பணிகின்றோம்



தமிழினத்தின் துயர்துடைக்க துடித்தெழுந்த தாயே!
தஞ்சமெனக் கைகொடுத்துப் பகையை எதிர்த்ததாயே
தாங்கவொண்ணாத் துயர் சுமந்து வெந்து அழிந்தாயே
தரணியிலே நின்தனைப் போல் தியாகியா ருண்டு

அமைதியினைக் காப்பதற்கு வந்தவர்களிங்கு
அகமகிழ்ந்து கொடுமைகளைப் புரிந்ததனால் நொந்து
இமயமென எழுந்து நின் றெதிர்கட் கஞ்சாது
இம்சித்த பாரதத்தின் முகத்திரையைகிழித்தாய்

உரிமைக்காய்ப் போராடும் வேங்கைகளை வாட்டி
உன்மத்தர் புரிந்துநின்ற தீவினையால் வாடி
உரங்கொண்ட நெஞ்சத்தோடெதிரிகளை யாட்டி
உயிரளித்து பாடமொன்று புகட்டினாயே அம்மா

மாநிலத்து தன்னாட்சி தந்திடுவோமென்றார்.
மாயாத கங்களையே புரிந்தெம்மைக் கொன்றார்.
மானத்தைக் காப்பதற்காய் வேள்வியிலே வெந்தாய்
வானத்து தேவதையா யுயர்ந்தின்று நின்றாய்.

மாதரிடை யெழில்முத்தா யிலங்குகின்ற தாயே
மாநிலத்து தமிழரெங்கள் சொத்தாகினாயே
பேதங்கள் தகர்த்தெறிந்து வென்றிடுவோம் ஈழம்
பூபதியே அம்மா நின் பாதம் பணிகின்றோம்.

மாரீசன்.

## ஒரு காவியம் நிறைந்தது

பாடுமீன்
நகரில்
ஒரு காவியம்
நிறைந்தது
பூபதி என்ற பூரண நிலா
எழுவான் கரையிலும்
படுவான் கரையிலும்
எழுந்தது
எழுந்தது
தொழுகை தொலைந்திட
அழகை கலைந்திட
வழமைகள் மாற்றிட
வரலாறு
சுமந்தது சுமந்தது
பாடும் மீன்
நகரில்
தமிழீழ விடுதலையில்
ஒரு
காவியம் பிறந்தது

- தமிழீழக் கவியராயர்.

## கொசோவாவில் நடைபெற்ற தாக்குதலில் மூன்று ஐ.நா. பொலிஸ் அதிகாரிகள் பலி!




கொசோவாவின் வடபகுதியில் சிறைச்சாலை ஒன்றிற்கு அருகில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பைச் சேர்ந்த 3 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரு அமெரிக்கர்களும், ஜோர்தானியர் ஒருவரும் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் ஏனைய அதிகாரிகளினால் நடத்தப்பட்டுள்ளதென ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார். மேலும், 11 பேர் வரை இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்துள்ளனர்.

மிற்ரோவினைவில் நடைபெற்றுள்ள இந்தச் சம்பவத்திற்கான காரணம் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இருந்தும், அதிகாரிகளுக்கிடையே ஏற்பட்ட தர்க்கமே இந்த உயிரிழப்புகளுக்கு காரணமாக அமைந்துள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையிலும், தடயவியலாளர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஈராக்கில் நடந்த தாக்குதலில் 4 அமெரிக்கப் படையினர் பலி!



சிரியாவின் எல்லையிலுள்ள ஈராக்கில் நேற்று இடம்பெற்ற தாக்குதலொன்றில் நான்கு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, அமெரிக்க வான் படையினர் இப்பகுதியில் தாக்குதலை மேற்கொண்டனர். இருந்தும் அமெரிக்க கடற்படையினர் இக்கட்டான சூழ்நிலையில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஈராக்கின் கெரில்லா வீரர்கள் அமெரிக்க இராணுவத்திற்கு வரும் விநியோகத்தை தடுத்து பெருமளவு சேதத்தை உண்டாக்கியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கலவரங்களாலும், கடத்தல்களாலும் வீதிகள் தடை செய்யப்பட்டன. 20 ஆயிரம் அமெரிக்க இராணுவம் கடமையில் அமர்த்தப்பட்டது. ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து நடந்து வரும் கலவரத்தை அமெரிக்க இராணுவம் கட்டுப்படுத்த முயற்சி செய்து வருகிறது.

சதாம் ஹுசைனின் ஆட்சியின் கவிழ்ப்புக்கு பின்பு தெற்கு ஈராக்கில் தொடங்கிய பயங்கரக்கலவரம் இதுவே எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலவரம் அமெரிக்காவினால் ஈராக்கில் செய்யப்படவுள்ள மீள்கட்டியெழுப்பும் செயற்பாடுகளைப் பின்தள்ளும் நடவடிக்கையாகும். இதனால், பொருட்களின் விலையுயர்வு ஏற்படுவதுடன், நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சியடையாமல் போகும் சாத்தியம் உண்டாகியுள்ளது.

ஈராக்கின் வீடமைப்பு அமைச்சரான பாயான் பக்கீர் கருத்து தெரிவிக்கையில், 1500 வெளிநாட்டு பொறியியலாளர்கள் கடத்தல், கொலை பீதியினால் ஈராக்கைவிட்டு வெளியேறியுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகிறது.

## ஸ்லோவாக்கிய ஜனாதிபதியாக இவான் கஷ்பரோவிக் தெரிவானார்!

ஸ்லோவாக்கியாவின் ஜனாதிபதியாக இவான் கஷ்பரோவிக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவான் கஷ்பரோவிக் முன்னாள்



பிரதமர் விளாடிமிர் மெசியரை தோற்கடித்துள்ளார்.

ஆனால், இரண்டாவது சுற்றில் அதிகவாக்குகள் கிடைக்கவில்லை. மக்கள் இருவரது தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் அதிக நாட்டம் கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - ஸ்லோவாக்கிய மக்கள் இந்தத் தேர்தலில் மாறுபட்ட உணர்வுகளை வெளிப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - விரைவில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஸ்லோவாக்கிய இணையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலியரின் வான் தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் பலி!



காஸாப் பிரதேசத்தில் கமாஸ் போராளிக் குழுவின் தலைவர் அப்டெல் அசிஸ் அல் ரான்ரிசி இஸ்ரேலியப் படையினரின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

கமாஸ் அமைப்பின் முன்னாள் தலைவர் சேக் அகமட் யாசீன் இஸ்ரேலியர்களின் வான் தாக்குதலில் சென்ற மாதம் கொல்லப்பட்ட பின்னர் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

கமாஸ் அமைப்பிற்கு மீண்டும் புதிய தலைவர் நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரது பெயர் அந்த அமைப்பினால் இதுவரை வெளியிடப்படவில்லை.

கமாஸ் இயக்கத்தலைவரின் படுகொலையில் சிந்தப்பட்ட இரத்தத்தைப்போன்று நூறு,மடங்கு இரத்தத்தை இஸ்ரேலியர்களிடமிருந்து சிந்த வைக்கவுள்ளதாக கமாஸ் அமைப்பு எச்சரித்துள்ளது.

இஸ்ரேலியப் படையினரின் வானொலிச் சேவையொன்றில் பிரதமர் ஏரியல் ஷரோன் வான் தாக்குதல் நடத்திய படையினரைப் பாராட்டியுள்ளார்.

அத்துடன், இஸ்ரேலிய சட்டசபை அங்கத்தவர்களில் ஒருவரான கிடியோன் எஷ்ரா கமாஷின் மற்றொரு தலைவரான கலீட் மெசாலினைக் கொல்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காஸா பிரதேசத்தில், செக்ரட்வன் எனப்படும் குடியிருப்புப் பிரதேசத்தின் ஊடாக பிரயாணம் மேற்கொண்ட வேளையிலேயே இந்தத் தாக்குதல் இஸ்ரேலியப் படையினரின் ஹெலிகொப்ரரிலிருந்து இரு எறிகணைகள் ரான்ரிசியின் வண்டியை நோக்கி மேற் கொள்ளப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலின் பின்னர் - ரான்ரிசி தள்ளாடியபடியே வண்டியிலிருந்து வெளியேறியதாகவும், வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே அவர் மரணமடைந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இந்தச் சம்பவத்தில் அவருடன் பயணம் செய்த மெய்ப்பாது காவலரும், வண்டிச்சாரதியும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவரின் திடீர் மரணத்தினை அறிந்துகொண்ட ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் தெருக்களில் ஒன்றுகூடி இதற்குத் தாம் பதில் தாக்குதலை நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# உலகநாடுகளிடமிருந்து

## ஈராக் போரை வெல்வதற்கான ஆதரவினை அமெரிக்க அதிபர் புஷ் பெறத் தவறிவிட்டார்!

### ஜோன் ஹெரி குற்றச்சாட்டு

ஈராக்கில் போரை வெல்வதற்கான ஆதரவினைப் பெற்றுக்கொள்வதற்கு அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ் தவறியுள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்புக்களைக் கொண்டுள்ள ஜோன் ஹெரி தெரிவித்தார்.

மேலும் ஈராக் மீதான அமெரிக்காவின் போர்த்தந்திரங்களில் மாற்



றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.


ஜோன் ஹெரி தொடர்ந்தும் பேசும்போது - ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியுடன் ஈராக்கை கட்டியெ முப்புவதற்கு குழுவொன்று அனுப்பப்படல் வேண்டும் எனவும், அமெரிக்கக் கட்டுப்பாட்டில் நேட்டோவின் படையொன்று அங்கு அனுப்பப்படல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த மாதம் ஈராக்கில் வாழும் வெளிநாட்டவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாகவும், பலர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜோர்தானிய மன்னர் அப்துல்லா தெரிவித்த கருத்தில், அமெரிக்கப் படைகள் ஈராக்கில் நிலைகொண்டிருப்பது, அரபு உலகில் அந்த நாட்டின் மீது பகையுணர்வினை ஏற்படுத்தியுள்ளதென அவர் தெரிவித்தார்.

அத்துடன், அரபுப் பிரதேசங்களிலும், உலகின் மறு பகுதிகளிலும் நிலைகொண்டிருப்பது, ஆரோக்கிய உலகிற்கு இடையூறாக உள்ளதாகவும் ஜோர்தான் மன்னர் அப்துல்லா தெரிவித்தார்.

ஜோன் ஹெரியின் இந்தக் கருத்துத் தொடர்பாக பி.பி.சியின் ஜானட் தெரிவிக்கும்போது - ஜனாதிபதித் தேர்தலுக்கு 7 மாதங்க



ளுக்கு முன்னர் தெரிவித்த கருத்துக்கள் தான் ஆட்சிக்கு வந்தால் செயற்படுத்தப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐவரிக்கோஷ் ஜனாதிபதியுடன் பேச்சுநடத்த அந்த நாட்டு எதிர்க்கட்சி முன்வந்தது!

ஐவரிக்கோஷ்ட் நாட்டு எதிர்க்கட்சிகள் அந்த நாட்டு ஜனாதிபதி லறுன் கபாக்போவுடன் மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தமது விருப்பத்தை தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் ஐவரிக்கோஷில் நடந்த ஊர்வலத்தில் 37 பேர் இறந்தனர். இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி நாடாளுமன்றத்திலிருந்து விலகியிருந்தது.

ஜனாதிபதியும், பிரதமரும் எதிர்க கட்சிகள் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டதால் எதிர்க்கட்சித் தலைவர்கள் மீண்டும் தமது பேச்சுவார்த்தைகளைத் தொடங்க இணக்கம் தெரிவித்தன.

ஐவரிகோஷ்ட் இரண்டாக பிளவு பட்டுள்ளது. காரணம் பயங்கரவாதிகள் செப்ரெம்பர் 2002 இல் வட பகுதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழு எதிர்க்கட்சிகளை கூட்டாகக் கொண்ட எதிர்க்கட்சி சம்பிரதாய



மற்ற மத சடங்குகள் முடிந்தபின் மார்கோஸ் சமாதான முயற்சியில் ஈடுபடுவதாக உறுதி தெரிவித்துள்ளன.

இந்த மதச் சடங்குகள் எதிர் வரும் சனிக்கிழமை காயமடைந்த, கொல்லப்பட்டவர்களின் ஞாபகார்த்தமாக நடக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மேற்படி எதிர்க்கட்சி எழுப்பிய பிரச்சினைகளை கவனம் எடுப்பதாகக் கூறி அரசாங்கத்தை முன்புபோல் சகஜமாக இயங்கவைப்பதற்காக சபையைக் கூட்ட அழைப்பு விடுத்துள்ளார்.

## அமெரிக்கப் படைகளுடனான மோதல் சமாதானமாக முடியப் போவதில்லை!

### -ஷியா முஸ்லிம்கள் தெரிவிப்பு-



(பாக்தாத்)

ஈராக்கின் புனித நகர் நஜாப்பில் அமெரிக்கப் படைகளுக்கும் ஷியா முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெறும் தாக்குதல்களுக்கு சமாதானமான முடிவு கிடைக்கப்போவதில்லை என ஷியா முஸ்லிம்களின் மதத் தலைவர் மொக்ரடா சாதரின் பேச்சாளர் தெரிவித்தார்.

சாதரின் ஆதரவாளர்களுக்கும், அமெரிக்கப் படையினருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் எந்தவிதமான உடன்பாடுகளும் ஏற்படவில்லை எனவும் பேச்சாளர் கஷாலி தெரிவித்தார்.

அமெரிக்கப் படையினர் தாக்குதல்கள் மேற்கொள்வதற்கு தயாராகி வருவதாகவும் இதனால், மதத்தலைவரின் ஆதரவாளர்கள், தம்மைப் பாதுகாப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கஷாலி கூறினார்.

ஆனால், அமெரிக்கப் படையினர் ஷியா முஸ்லிம்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - அமெரிக்கப்படையினருக்கும், சாதருக்குமிடையே தூதராகப் பணிபுரியும் அட் என் அலி பி.பி.சிக்குத்தெரிவித்த கருத்தில், சமரசப்பேச்சுக்கள் இடைநிறுததப்பட்டுள்ளதெனவும், பலர் இந்தப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவிடாது தடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

## உலக நோக்கு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஹெல உறுமய பிரதிநிதிகள் ஐ.தே.கவுடன் இன்று சந்திப்பு!

(கொழும்பு)

ஹெல உறுமயவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் பேச்சு வார்த்தை ஒன்று இடம்பெறவுள்ளது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பிற்கிணங்கவே இன்றிரவு 10 மணியளவில் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவின்போது தமக்கு ஆதரவு தருமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - சபாநாயகர் தெரிவ்டயம தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ அல்லது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ நாளை ஹெல உறுமயவைச் சேர்ந்த பிக்குமாரைச் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

ஏற்கனவே இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் ஜாதிக ஹெல உறுமயவும் பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியானமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# உல்லாசப் பயணிகளின் வருகையை இங்குள்ள அரசியல்நிலை பாதிக்கும்!

(கொழும்பு)

உல்லாசப் பயணத்துறையைத் தொடர்ந்து முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லவேண்டுமெனில் தற்போதைய அரசாங்கம், முன்னைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலன அரசின் உல்லாசப் பயணத்துறை தொடர்பான கொள்கையை பின்பற்றவேண்டும்.

இவ்வாறு இலங்கையின் உல்லாசப் பிரயாண சபையின் பணிப்பாளர் கலைச்செல்வம் தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

தற்போதைய நிச்சயமற்ற அரசியல் சூழ்நிலையால் உல்லாசப் பயணத்துறையில் இதுவரை எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. சமாதான முயற்சி தொடருமாக இருந்தால் உல்லாசப் பயணத்துறையை மேலும் உயர்ந்த நிலைக்கு அபிவிருத்தி செய்யமுடியும்.

## பணிப்பாளர் கவலை தெரிவிப்பு

உல்லாசப் பயணத்துறை தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் கொள்கைகளையே தற்போதைய அரசாங்கமும் கடைப்பிடிக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

இது தற்போதுள்ள அரசாங்கத்தின் கடமை எனவும் முன்னாள் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன் சீனாவின் சந்தை வாய்ப்புக்களை சாத்தியமான வகையில் அதிகரிப்பதன் மூலம் வருடமொன்றுக்கு முப்பதாயிரம் உல்லாசப் பயணிகளை வரவழைக்க முடியும்.

கடந்த ஆண்டு மட்டும் 5 லட்சம் உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இது 2000 ஆம் ஆண்டை விட அதிகரித்த தொகையாகும்.

2000 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டுவரை 4 லட்சத்து 414 உல்லாசப் பயணிகளே வந்தனர். இது 2003 ஆம் ஆண்டு 5 லட்சத்து 630 ஆக அதிகரித்ததென உல்லாசப் பிரயாணச்சபை புள்ளி விபரங்கள் தெரிவித்தன. இந்த வருடம் இந்த எண்ணிக்கையை 6 லட்சமாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனாலும் தற்போது காணப்படும் அரசியல சூழ்நிலை காரணமாக இந்த இலக்கை எட்டமுடியுமென்பது சந்தேகமானது தான் என உல்லாசப் பயணத்துறையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பிக்குகளுக்கு நாடாளுமன்றத்தில் சிறப்பு சலுகைகள் வேண்டுமாம்!

## சபாநாயகருடன் பேசத் திட்டம்

ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த பௌத்த பிக்குகள், தமது நாடாளுமன்ற சலுகைகளை குறித்து, புதிதாக தெரிவுசெய்யப்படும் சபாநாயகருடன் பேச்சு நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் வண.அத்துரலிய ரத்தினதேரோ இது குறித்துத் தெரிவித்ததாவது -

நாடாளுமன்ற சபாநாயகருடன் மதகுருமார்களின் நிலைப்பாட்டைப் பற்றி பேசவிருக்கின்றோம். நாடாளுமன்ற அமர்வின்போது, மதகுருமார்கள் சபாநாயகருக்கு தலைவணங்குவது என்பது மதத்துக்கு புறம்பான ஒன்று. இதுபற்றி சபாநாயகரிடம் ஆட்சேபனை எழுப்பவிருக்கிறோம்.

மதகுருமாரின் உரிமைகள், கடமைகள், நடைமுறைகள் நாடாளுமன்றத்தில் எப்படியிருக்கவேண்டும் என்பது தொடர்பாகவும், அவை மதத்தை இழிவுபடுத்தாமல் இருக்கவேண்டும் என்பது குறித்தும் சபாநாயகருடன் கலந்து பேசவேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியானி விஜயசேகர இதுபற்றி கருத்துத் தெரிவிக்கும்போது -

சபாநாயகருக்கு தலை வணங்குவது என்பது ஒரு சம்பிரதாயம். ஆனால் இது சொல்லப்படாத சட்டமாகும்.

மதகுருமார்களுக்கென்று நாடாளுமன்றத்தில் தனியான இடம், தனியான ஓய்வறை, தனியான அலுவலகம் என்பன அமைத்துக் கொடுக்கப்படும்.

மதகுருமார்கள் தமக்கெனப் புறம்பான இடம் ஒதுக்கித்தருமாறு கேட்டனர். இதற்கான அனுமதியை புதிய சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஆதரிக்கவேண்டும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வண.பத்தேகம சமித்த தேரோ சபாநாயகர் நாடாளுமன்றத்திற்கு வந்த பின்னரே உள்வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன்மூலமாக மேற்படி தேரோவை சபாநாயகருக்கு தலை வணங்கச் செய்யாமல் அமரச்செய்யும் நோக்கமே அது எனத் தெரிவித்தார்.

பௌத்தகுருமார் மதியம் 12 மணிக்கு உணவு உண்ணும் கடமையிலிருந்து விலக்கப்படமாட்டார்கள். 12.30 இற்கே நாடாளுமன்றம் கலைக்கப்படும். அவர்கள் மதிய உணவுக்காகச் சென்றாலும் நாடாளுமன்றக் கூட்டம் 12.30 மணிவரை தொடரும் எனவும் அவர் தெரிவித்தார்.

# 'விடுதலைப் புலிகள்' இன்று வெளிவருகிறது

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் பங்குனி - சித்திரை மாதத்திற்குரிய 115 ஆவது குரல 'துரோகச் செயற்பாடொன்று தோற்கடிக்கப்பட்டுவிட்டது' என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகிறது.

'தமிழர் ஆணையும் சிங்களவர் ஆசையும்' எனச் சொல்லும் ஆசிரியத தலையங்கத்துடன் வரும் இவ்வேட்டில், க.வே.பாலகுமாரன் எழுதிய 'தாக்குதல் நிலையும் தற்காப்பு நிலையும்' என்ற கட்டுரையும், சாரணன் எழுதிய தேர்தல் அரங்கில் சிங்கள மனோபாவம் என்ற கட்டுரையும், 'பிரித்தாளும் தந்திரம் பழைய மொந்தையில் புதிய .......'என்ற கட்டுரையும், எல்லாளன் எழுதிய 'தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணை' போன்ற அரசியல் கட்டுரைகளும் கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய 'களப்படப் பிடிப்பும் படத்துறை வளர்ச்சியும்' என்ற கட்டுரையும் இடம்பெறுகின்றன.

ஹைற்றியின் போராட்ட விபரிப்பான ஹைற்றியின் நேற்றுகளும் இன்றைகளும் என்ற கட்டுரையும் மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது.

# சில பாடசாலைகள் இன்று திறப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நிலையங்களாக இயங்கவுள்ள பாடசாலைகள் இன்று இரண்டாம் தவணைக்காக திறக்கப்படவிருக்கின்றன.

இந்தப் பாடசாலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெற்று பின்னர் மீண்டும் விடுமுறை விட்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை, க.பொ.த உயர்தரப் பரீட்சை நிலையங்களாக செயற்படாத பாடசாலைகள் யாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முத்தமிழ் கலையரங்கு

(கிளிநொச்சி)

புலிகளின் குரல் மாதாந்த முத்தமிழ் கலையரங்கம் இன்று முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது. இன்று இரவு 7.30 மணியளவில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்வாக இடம்பெறுகிறது.

இந்த முத்தமிழ் கலையரங்கில் சிறப்புரைகள், நடன, நாடக நிகழ்வுகளும் இடம்பெறவிருப்பதாக புலிகளின் குரல் நிர்வாகம் அறிவித்துள்ளது.

# துப்பாக்கிச்சூட்டில் அறுவர் காயம்

(கொழும்பு)

கொழும்பு புறநகர்ப் பகுதியில் உள்ள பத்தரமுல்ல பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் கோடீஸ்வரர் ஒருவர் உட்பட அறுவர் காயமடைந்தனர்.

கோடீஸ்வரரின் வீட்டுக்கு காரில் வந்திறங்கிய ஆயுததாரிகள் நடத்திய திடீர் தாக்குதலிலேயே அறுவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் இருவரின நிலை மோசமடைந்து இருப்பதால் அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## படுகொலை....

கப்பட்ட முக்கிய நபர் தலைமறைவாக இருந்துவந்தார்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் குறிப்பிட்ட சந்தேகநபர் நடமாடி வருவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தபோதும் - அவரைக் கைது செய்ய முடியவில்லை.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி கொலைச் சந்தேகநபர் யாழ்.நகரிலுள்ள ஸ்ரான்லி வீதிப் பகுதியில் நடமாடுவதாக, போக்குவரத்துப் பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து, பொலிஸார் இவரைக் கைதுசெய்தனர். பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்ய வந்தபோது - அவர் கட்சி ஒன்றின் அடையாள அட்டையைக் காண்பித்து, தப்ப எத்தனித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைதான சந்தேகநபர் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த வேலு என அழைக்கப்படும் திருஞானம் சிவகுமார் (வயது 35) எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் மேலதிக விசாரணைக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர் இந்திய இராணுத்தினர் இங்கு தங்கியிருந்த காலத்தில் இயங்கிய தமிழ்த் தேசிய இராணுவத்தில் உறுப்பினராக இருந்தவர் என்றும் கூறப்படுகிறது.

## மட்டுவிலில்...

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி பொலிஸாரின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான லொறியை சாவகச்சேரி பொலிஸார் தடுத்து வைத்துள்ளதுடன் மேற்படி விபத்துத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(தீ)

## அன்னை பூபதி...

வடமராட்சியில் கரணவாய் மூத்த விநாயகர் கோவிலிலும் யாழ்ப்பாணத்தில் முத்திரைச்சந்தி கேணல் கிட்டு பூங்காவிலும், ஊர்காவற்றுறை திறந்த வெளியரங்கு, சாவகச்சேரி - சங்கத்தானை முருகன் கோவிலிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பில் அன்னை பூபதி உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த இடமாகிய மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் ஏற்பாட்டில் சிறப்பான முறையில் அன்னையின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

(ப)

## பிரதிப் பாதுகாப்பு...

லும் பலத்த எதிர்ப்பு இருந்து வந்தது.

இந்த நிலையிலேயே, ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை வழங்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் - இந்தப் பதவியை தமது குடும்பத்துக்குள் இருக்கும் ஒருவருக்கு வழங்கவே ஜனாதிபதி சந்திரிகா விரும்புவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு முதல் 2001 ஆண்டு வரை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தை இனப்பிரச்சினையை இராணுவ ரீதியாக தீர்க்க முனைப்புடன் செயற்பட்டு வந்தவர் என்றும், மோசமான இராணுவப் பின்னடைவுக்குக் காரணமானவரென விமர்சிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## உதவி வழங்கும்....

செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இந்தக் கூட்டத்தில் உதவி வழங்கும் நாடுகள் - விடுதலைப் புலிகள், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்துகொண்ட போர் நிறுத்த உடன்படிக்கை குறித்தும் ஆராயவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## புலிகளுக்கு....

மோட்டார்கள், 81 மி.மீற்றர் மோட்டார்கள். பிஸ்டல் ரவைகள், வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் பெருமெண்ணிக்கையான, காவும் கட்டில்கள் உட்பட பெருமளவு ஆயுத தளபாடங்கள் ஏற்றப்பட்டிருப்பதாக இராணுவ இரகசிய உளவுப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் எதிர்வரும் 20 ஆம் திகதியளவில் இலங்கையை வந்தடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், இது தொடர்பான தகவல் சகல கடற்படைத் தளங்களுக்கும் அறிவிக்கப்பட்டு, கடற்படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

கிழக்குக் கடற்பரப்பிலும் கடற்படையினரின் ரோந்து மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக கடற்படை சிரேஷ்ட அதிகாரியை மேற்கோள் காட்டும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.